உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 32 | பரிதாபி – மார்கழி – 10—1—73 | இதழ் 2

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## ஞாயிறு போற்றுதும்

மண்ணில் வாழும் உயிர்கட்கு விண்ணில் விளங்கும் பொருள்கள் பலவற்றின் உதவி இன்றியமையாததாய் உள்ளது. "வான் நின்று உலகம் வழங்கி வருவது", "விசும்பின் துளி வீழின் அல்லால் மற்று ஆங்கே பசும்புல் தலை காண்பரிது" என்பது முதலாகச் சிறப்பிக்கப்படுகின்ற மழை, விண்ணினின்றே மண்ணிற்குக் கிடைக்கின்றது. அதனால், "விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து உள்நின்று உடற்றும் பசி" என்கின்றது திருக்குறள்.

மழையை அடுத்து உயிர்கட்கு இன்றியமையாத காற்றும் விண்ணிலே இயங்குவதாகத்தான் உள்ளது. அடுத்து உயிர்கள் பொருள்களைத் தெரிந்து நடப்பதற்கு இன்றியமையாத் துணையாகிய ஒளி மண்டலங்கள் பலவும் விண்ணையே இடமாகக்

கொண்டுள்ளன. இதனால், விண்ணுலகமே மண்ணுலகைக் காப்பதாகின்றது. அதனால் விண்ணுலகை, 'தேவர் உலகம்' என்று சொல்கின்றோம்.

மண்ணகத்திற்கு இன்றியமையாத விண்ணகப் பொருள்களில் சூரியன் முதன்மையானது. எத்துணை நலங்கள் வாய்ந்திருப்பினும் ஒளியில்லாது இருள் சூழ்ந்திருக்குமாயின், அத்துணை நலங்களும் என்ன பயனைத் தரும்? இத்தகைய ஒளியை மண்ணுலகிற்கு வழங்குவனவற்றுள் ஞாயிறே (சூரியனே) சிறந்து விளங்குவது. அதனால், விண்ணகப் பொருள்களில் அஃது ஒன்றே வணக்கத்திற்கு உரியதாக மக்களால் சிறப்பாகக் கொள்ளப்பட்டது

'இயல் இசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுள், 'முத்தமிழ்ப் பெருங்காப்பியம்' என்பன முதலாகச் சிறப்பித்துப் பேசப்படுகின்ற, தமிழ் முதற் பெருங்காப்பியமாகிய சிலப்பதிகாரம் முதற் பாடலில், "ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்" என்று சூரியனைப் போற்றுகின்றது. 'திங்கள்' எனப்படும் சந்திரன் சூரியனுக்கு அடுத்துக் கூறத்தக்கதே. எனினும் 'திங்கள் மங்கலப் பொருள்' எனக் கூறப்படும் மரபுபற்றி அக் காப்பியம் திங்களை முதலில் போற்றியது. இன்னும் அப்பாடலில், மழையும் போற்றப்பட்டது. இவ்வாறு அந்நூல் 'திங்கள், ஞாயிறு, மழை' என விண்ணகப் பொருள்கள் மூன்றையும் போற்றியிருப்பினும், அவற்றுள் நடுவணதாக வைத்துப் போற்றப்பட்ட ஞாயிறு ஒன்றே பெரிதும் வணக்கத்திற்கு உரியது.

ஞாயிற்றினால் உலகிற்கு உளவாகும் நன்மைகள் எண்ணிறந்தன. முதலாவது நன்மை, உயிர்களின் இயக்கத்திற்கு இன்றியமையாத ஒளி. அடுத்தது வெப்பம். வெப்பம் இல்லையேல், உயிர் உடம்பில் நிற்கமாட்டாது. எனவே, 'உயிரை உடம்பில் நிலைபெறச் செய்வதே ஞாயிறுதான்' என்று கூறினால், அது மிகையாகாது. மற்றும் ஞாயிற்றின் வெப்பத்தினாலேயே தாவரங்கள் நன்கு வளர்கின்றன; பூக்கின்றன; காய்க்கின்றன; பழுக்கின்றன. ஞாயிற்றின் உதவி இல்லையேல், இவற்றுள் ஒன்றும் நடவாது. இன்னும் உயிர்களுக்குத் தொல்லை தருகின்ற நச்சுக் கிருமிகள் ஞாயிற்றின் வெப்பத்தால் அழிக்கப்படுகின்றன உடலில் நோய்கள் அணுகாமல் நலத்துடன் வாழ ஞாயிற்றின் வெம்மையில் மூழ்குதல் பலரால் கடைப்பிடிக்கப்படுகின்றது

'உலகம் ஓர் நெறி முறைக்கு உட்பட்டு நடைபெறுகின்றது' என்பதை ஞாயிற்றின் தோற்றம் முதலியன திட்டமாக உணர்த்துவது போல, வேறு எதுவும் உணர்த்துதல் இல்லை. ஆகவே, இறைவனது அருள்ஒளிக்கும், அருள் ஆற்றலுக்கும் ஞாயிறு மிகச் சிறந்த ஓர் இயற்கை அடையாளமாகத் திகழ்வதை உணரலாம். இதனை இவ்வாறு உணர்ந்த சங்கப்புலவர் ஒருவர் தாம் செய்யும் கடவுள் வாழ்த்தில், "நின் வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுள" எனப் போற்றினர். மணிவாசகர் "அருக்கனில் சோதி அமைத்தோன், திருத்தகுமதியில் தண்மை வைத்தோன் திண்டிறல் தீயில் வெம்மை செய்தோன்' என இறைவனது பேராற்றலாலேயே ஞாயிறும் திங்களும்-ஒளியும் வெம்மையும் தண்மையும் உடையனவாக விளங்குதலைக் குறிப்பிடுகின்றார். இவ்வாற்றால், ஞாயிறு மக்கட்குக் கண்கண்ட தெய்வமாய் விளங்குதல் வெளிப்படை.

கடவுளது உருவம், பெயர், செயல் வேறுபாட்டில் வேறுபடுகின்ற சமயிகள் பலரும் ஞாயிற்றைப் போற்றுவதில் ஒன்றுபட்ட கருத்துடையவராய் இருத்தல் நினைந்து இன்புறுதற்கு உரியது.

> "உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
> பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு"

என்னும் திருமுருகாற்றுப்படையில் "பலர்புகழ் ஞாயிறு" என்பதற்கு, "எல்லாச் சமயத்தாரும் புகழும் ஞாயிறு" என்று நச்சினர்க்கினியர் பொருள் விரிக்கின்றார். அஃது உண்மையே என்பது கண்கூடாக உலகில் அறியப்படுவது. ஞாயிற்றைக் கூறும் இடங்களில் எல்லாம், "பலர் புகழ் ஞாயிறு" என்று கூறப்படுவதைச் சிவஞான போதச் சிறப்புப் பாயிரத்தாலும் அறியலாம்.

பாரத நாட்டுப் பழஞ் சமயங்கள் ஆறனுள் 'சௌரம்' என் ஒன்று சொல்லப்படுகின்றது. இது சூரியனை முதல்வனைக் கொண்டதே. 'சௌரம்' என்னும் இச்சமயமேயன்றிப் பிற சமயங்களும், சூரியனுக்கு ஒரு முதன்மை கொடுத்தே வழிபடுவது பாரத நாட்டின் மரபாக உள்ளது. காலையில் நீராடி நியமங்களைச் செய்த பின், சூரியனை வணங்குதல் வைதிக சமயங்கள் அனைத்திற்கும் பொதுவான ஒரு நிகழ்ச்சி.

சமய அனுட்டானம் செய்யாதவர்கள்கூடக் காலையில் சூரிய நமஸ்காரம் பன்னிரண்டுமுறை செய்வதும் வழக்கமாக உள்ளது. வைதிக மந்திரங்கள் அனைத்தினுள்ளும் தலையாயதாகச் சொல்லப்படுகின்ற 'காயத்திரி' என்னும் மந்திரம் சூரியனைப் பற்றியது

என்பதே வைதிகக் கொள்கை. "வேதப் பயனும் சைவம்" எனச் சேக்கிழாரால் குறிக்கப்பட்ட சைவ சமயம், 'காயத்திரி சிவ பெருமானையே குறிக்கின்றது' எனக் கூறும். இதனை, 'உயர் காயத்திரிக்கு உரிப்பொருள் ஆதலின்" என்னும் அரதத்த சிவாசாரிய ரது பஞ்சசுலோகப் பொருள் பற்றி நன்கு உணரலாம்.

'சூரிய மண்டலத்தில் சதாசிவ மூர்த்தியைப் பாவித்து வழி பட வேண்டும்' என்பது சிவாகமங்களின் விதி. அவ்வாறு வழிபடுமிடத்துச் சூரியன் சிவபெருமானுக்கு இடமாய்ச் 'சிவ சூரியன்' ஆகின்ருன். சிவபெருமானது அட்ட மூர்த்தங்களில் (எட்டுருக்களில்) சூரியன் ஒன்று என்பது நன்கு அறியப்பட்டது. இதனையே அப்பர் பெருமான்,

"அருக்கன் பாதம் வணங்குவர் அந்தியில்
அருக்கன் ஆவான் அரன்உரு அல்லனே!
இருக்கு நான்மறை ஈசனை யேதொழும்
கருத்தி னைஅறி யார்கல் மனவரே"

என்று அருளிச்செய்தார். இதில் பின்னிரண்டு அடிகளால், 'காயத்திரி மந்திரம் சிவபெருமானையே குறித்தது' என்பது வலியுறுத்தப்படுகின்றது.

சிவாலயங்களில் சூரிய மூர்த்தி முதன்மை பெற்று விளங்கு வதையும், காலையில் அங்குக் கால சந்தி வழிபாடு செய்யும் பொழுது சூரிய மூர்த்திக்குப் பூசை செய்தபின்பே மூல மூர்த்திக் குப் பூசை செய்யப்படுவதையும் காணலாம். சூரியனும், சந்திர னும், சிவபெருமானது வலக்கண் இடக்கண் ஆதல்பற்றிச் சிவாலயங்களில் அம்மூர்த்திகள் சந்நிதிக்கு வலப்பக்கத்தி லும், இடப்பக்கத்திலும் எழுந்தருள்விக்கப் பெறுகிருர்கள். ஆன்மார்த்த பூசையிலும் முதற்கண் சூரிய பூசை விதிக்கப்பட்டுச் செய்யப்படுகின்றது. எவ்வாருயினும், நம் இந்திய நாட்டின் பழைய வைதிக மதங்கள்யாவும் ஞாயிற்றை வழிபடும் வழக்கத்தை மாருமல் கொண்டு நிற்கின்றன என்பது நினைவு கூரத்தக்கது.

சீனம், கிரேக்கம் முதலிய பிற நாடுகளிலும் சூரியனைக் கடவு ளாகக் கொண்ட மதங்களும், சூரிய வழிபாடும் உள்ளன என அந்நாடுகளின் இயல்பை அறிந்தோர் கூறுவர். வடநாட்டில் கோனர்க் என்னுமிடத்திலும், தமிழ்நாட்டில் தஞ்சைத் தரணியில் சூரியனர்கோயில் என்னும் தலத்திலும் சூரியனுக்குத் தனியே ஆலயங்கள் அமைத்து வழிபடுவதைக் காண்கிறேம். எனவே, உலகம் எங்கும் சூரிய வணக்கம் உளதாதல் அறியப்படும்.

இவ்வணக்கத்தால் சிறப்பாக அறியத்தக்கது, பேரொளியும், பேராற்றலும் உடைய இறைவன் உலகிற்கு அருள்புரிகின்ருன் என்பதேயாம்.

நாள்தோறும் ஞாயிறு போற்றுதல் உளதாயினும், அதற்குச் சிறப்பு நாள் உத்தராயணத் தொடக்கமாகிய தைமாதப் பிறப்பே யாகும், அந்த நாள், தேவர்கட்குச் சூரியோதய காலமாகச் சொல்லப்படுகின்றது. எனவே, மண்ணுலகிற்கே யன்றி விண் ணுலகிற்கும் சூரியன் ஒளிதருகின்ற அந்த நன்னுள் சூரியனுக்குச் சிறப்பு வழிபாடு செய்யும் நாளாக அமைகின்றது. அதனைப் பொங்கற் பெருநாளாக, மிக்க சிறப்புடன் கொண்டாடி, 'பால் பொங்கிற்று' என்று கேட்டும், 'நன்ருய்ப் பொங்கிற்று' என்று சொல்லியும் ஒருவரோடு ஒருவர் அளவளாவி மகிழ்வது தமிழ் நாட்டின் வழக்கமாக உள்ளது.

பொங்கற் பெருநாள் பெரும்பான்மையும் நன்றி யுணர்வை வெளிப்படுத்தும் முறையிலே அமைந்துள்ளது; உலக நலத் திற்கு-சிறப்பாக வேளாண்மைத் தொழிலுக்கு மழை இன்றியமை யாதது. அதற்குரிய தெய்வம் இந்திரன். அவன் மழை பெய் வித்தமையைப் பாராட்டும் முறையில் பொங்கலுக்கு முன்னுள் போகி பண்டிகை கொண்டாடப்பெறுகின்றது 'போகி' என் பது இந்திரனைக் குறிக்கும் பெயர்,

பொங்கற் பெருநாள் உலகிற்கு நலம் பல தருகின்ற சூரிய வழிபாடாக அமைந்துள்ளது. மறுநாள் 'மாட்டுப் பொங்கல்' என்பது, வேளாண்மைக்கும், பிறவகைக்கும் நமக்கு நன்கு உதவிவருகின்ற காளைகளையும், பசுக்களையும் வழிபடுவதாகும். மாட்டுப் பொங்கலை அடுத்து வரும் நாள், 'கன்று பொங்கல், காணும் பொங்கல், கன்னிப் பொங்கல்' என்று ஒவ்வோர் இடத்தில் ஒவ்வொருவகையாகக் கொண்டாடப்படுகிறது வளர்ந்து பின்னர் உதவத்தக்க கன்றுகட்கு நலம் உண்டாவதற் குச் செய்யும் வழிபாடாகக் கன்று பொங்கல் கொண்டாடப்படு கிறது. காணும் பொங்கலாகச் சொல்லப்படுவது பெரியோர்களை யும், முதலாளிகளையும் கண்டு வணங்கி வாழ்த்துப்பெறுவதாகும். கன்னிப்பொங்கலாவது, மார்கழி மாதம் முழுவதும் நோன்பு நோற்ற கன்னிப்பெண்கள் நீர்த்துறைக்குச் சென்று கூட்டு வழிபாடு செய்து மகிழும் நாளாகும்.

அத்தகைய பொங்கற் பெருநாள் அடுத்து வர இருப்பதால், அதனை அனைத்துச் சிறப்புக்களுடனும் கொண்டாடி நலங்கள் பலவும் எய்துவோமாக.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ஆதீன மடாலயத்தில் நிகழ்ந்த திருவெம்பாவை வகுப்பில்

வழங்கியருளிய

# ஆசியுரை

சைவமெய்யன்பர்களே !

இவ்வாண்டில் திருவாதிரைத் திருவிழா மிக முன்னதாகவே-கார்த்திகை மாதத்திலேயே தொடங்குகின்றது. சிவபெருமானுக்குரிய பற்பல விழாக்களுள் திருவாதிரை விழாவே தலையாயது. இருபத்தேழு நட்சத்திரங்களுள் திருவாதிரையே சிவபெருமானுக்கு உரியது. இது பௌர்ணமியோடு சேர்ந்து வருவது மார்கழித் திங்களிலேதான். அதனால் திருவாதிரைத் திருவிழா மார்கழி மாதத்தில் கொண்டாடப் பெறுகின்றது. ஆகவே, திருவாதிரையை முன்னிட்ட பத்து நாட்கள் சைவர்களுக்கு மிகச் சிறந்த நோன்பு நாட்களாகும். இந்தப் பத்து நாட்களிலும் திருமுறைகளைக் காப்பிட்டு வைத்துத் திருவெம்பாவை ஒன்றை மட்டுமே ஓதுதல் சைவ மரபாய் உள்ளது.

மார்கழித்திங்கள் மற்றைய திங்கள்களை விட மிகமேலானது. அதற்குக் காரணம், அது தேவர்கட்கு வைகறைப் பொழுதாக இருப்பதேயாகும். அதனால் இத்திங்கள் முழுவதும் விடியலில் எழுந்து நீராடி, சூரியோதயத்திற்கு முன்பே வழிபாடுகளை முடிக்க வேண்டுவது இன்றியமையாததாகும். மார்கழித்திங்கள் முழுவதிலும் இந்நியமங்களை இவ்வாறு தவறாமற் செய்தால் ஆண்டு முழுவதும் செய்தபயன் உண்டாகும். நம் கயிலைக் குருமணி அவர்கள் மார்கழி வழிபாடு விடியல் வழிபாடாதல் பற்றி, தொலைவில் உள்ள தலங்கட்கு யாத்திரை செய்வதாயின் மற்றைய காலங்களில் செய்வதல்லது மார்கழி மாதத்தில் செய்யாது ஆன்மார்த்த மூர்த்தியின் வழிபாட்டிலே ஈடுபட்டு வந்தார்கள். மார்கழி மாதம், வழிபாட்டிற்கே உரிய மாதம் என்பது பற்றியே மற்றைய உலகியல் நிகழ்ச்சிகளில் ஒன்றையும் இதில் இயற்றுதல் கூடாது என்று பெரியோர்கள் விலக்கியுள்ளார்கள்.

இம்மாதம் பீடுடைய (பெருமையுடைய) மாதமே தவிர பீடை மாதமல்ல. மாயூரம் (அம்மை, மயில் வடிவமெடுத்து இறைவ ஊைப் பூசித்ததால் மாயூரம் எனப்பெற்றது) என்பது. வழக்கத்தில் மாயவரம் என வழங்கப்படுகிறது. யாரும், மாய வரம் கேட்க மாட்டார்கள். இதுபோன்றே பீடுடைய மாதத்தைப் பீடை மாதம் என அறியாமல் வழங்குகின்றனர்.

மார்கழி மாதம் முழுவதுமே சிறந்தது என்றாலும், திருவாதிரையை முன்னிட்ட பத்து நாட்களும் மிகவும் சிறந்தனவாகும். இப்பத்து நாட்களிலும் 'திருவெம்பாவை ஒன்றையே ஓதுதல் வேண்டும்' என்று முன்னோர் விதித்திருப்பதற்குத் தக்க காரணம் இருத்தல் வேண்டும். திருவாசகத்தில் திருவெம்பாவை ஒரு தனிச் சிறப்புடையது என்பது, சிவபெருமான் மாணிக்கவாசகரைத் திருக்கோவையார் பாடும்படி கேட்டபொழுது, 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என்று கேட்டதாகச் சொல்லப்பட்டு வரும் செவிவழிச் செய்தியால் அறியலாகும்.

'திருவெம்பாவையின் தத்துவப் பொருள் மனோன்மனி முதலிய சத்திகள் ஒன்பதின்மருள் ஒருத்தி மற்றொருத்தியை எழுப்பப் பின்பு இருவரும் சேர்ந்து மூன்றாமவளை எழுப்ப, இவ்வாறே எல்லாச் சத்திகளும் எழுந்து பிரபஞ்ச சிருட்டியாகிய உலகத் தோற்றத்தை நிகழ்த்துவது, என்பர். அதற்கேற்ப இதன் இறுதிப்பாடலில் சைவத்தில் சிறப்பாகச் சொல்லப்படும் இறைவன் தொழில் ஐந்தும் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளன. ஐந்தொழில்கள் திருமுறைகளில் வேறு எந்த இடத்திலும் இவ்வளவு தெளிவாகக் காணப்படவில்லை. மக்களாயினும், தேவராயினும் அவரவர்கட்கு அமைந்த விடியற்காலமே அன்றாடச் சிருட்டிபோல அமைவது. அது கருதித்தான்போலும், பிரபஞ்ச சிருட்டி, மற்றும் திதி முதலியவற்றைக் கூறும் திருவெம்பாவையையே இந்தப் பத்து நாட்களிலும் ஓதல் வேண்டும் என்று முன்னோர்கள் விதித்துள்ளார்கள்! இன்னும் இத்திருவெம்பாவையில் உலக வாழ்க்கைக்கு வேர்போல உள்ள பெண்களின் நலத்திற்கும், மற்றும் உலகப் பொது நலத்திற்கும் ஆவன பல அமைந்துள்ளமை காணலாம்.

திருவெம்பாவையை மாணிக்கவாசகர் திருவண்ணாமலையில் அருளிச்செய்தார் என்பது வரலாறு. அதற்கேற்ப இதில் திருவண்ணாமலையைப் பற்றிய குறிப்புக்கள் பல உள்ளன. முதற் பாடலே, "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை" என்று தொடங்குகின்றது. சிவபெருமான் திருமாலும் பிரமனும் ஆகிய இருவராலும் அடிமுடி அறியப்படாத சோதியுருவாய்த் தோன்றியது திருவண்ணாமலையிலே என்பது உலகம் அறிந்தது.

" பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர் ;
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே "

என்பதிலும் இக்குறிப்பு அமைந்துள்ளது. " மால் அறியா, நான்முகனும் காணா மலை " என்பது முன் சொன்னவற்றிலும் சற்று வெளிப்படையாக உள்ளது " அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும் " என்ற தொடர் திருவண்ணாமலையில் இது பாடப்பெற்றது என்பதை வெளிப்படையாகவே குறிக்கின்றது எனலாம்.

" முதற் பாடலில் சோதியை யாம்பாட " என்பதில் 'யாம்' என்றது ஒருத்தியே தன்னை உயர்வு பற்றிப் பன்மையாகக் கூறினள் எனக் கொள்ளுதல் தத்துவக் கருத்துக்கும் பொருந்துவதாய் இருக்கும். எவ்வாறெனில், 'மனோன்மனி' என்னும் சத்தி ஒருத்தியே முதலில் தானே எழுந்து, பின் 'சர்வபூத தமனி' என்னும் சத்தியை எழுப்புவதாகச் சொல்லப்படுகின்றது. இதில், " யாம் பாடக் கேட்டேயும் வளருதியோ " என்று சொல்லிப் பின்பே, " வன்செவியோ நின் செவிதான் " என்றமையால் முதலில் கேட்டுக் கொண்டே உறங்கினள் என்று நினைத்துப் பின்புதான் நமது பாட்டு அவளது காதில் விழவில்லை ; அப்படி உறங்குகிறாள் என்று, எழுப்ப வந்தவள் அறிந்தாள் என்பது தெரிகின்றது. இன்னும், 'உன் காது செவிடோ' என்று சொல்லாமல் 'வன் செவியோ' என்று இனிமையாகக் கூறிய நயம் அறிந்து இன்புறத் தக்கது.

" முத்தன்ன வெண்ணகையாய் " என்ற பாடலில், " பத்துடையீர் " என்பதற்கு, 'பற்று, பத்து என வந்தது' என்றும் சொல்வதுண்டு. என்றாலும், 'அடியார் இலக்கணம் பத்தும் உடையீர் என்பதுதான் சிறப்பாக இருக்கும். இறைவனிடத்து மெய்யன்புடைய அடியவர்க்கு உள்ள புறத்திலக்கணம் பத்து, அகத்திலக்கணம் பத்து என்று சொல்லப்படுகின்றது. புறத்திலக்கணம் செய்கையாக நிகழும். அவை ;

விபூதி உருத்திராக்கம் அணிதல், குருவை வணங்கல், சிவனைத் துதித்தல், சிவநாமத்தை எப்பொழுதும் சொல்லுதல், சிவ பூசை செய்தல், சிவ தருமம் (சரியைத் தொண்டு, ஆலயத் திருப்பணி முதலியவை) செய்தல், சிவ புராணம் படித்தல் கேட்டல், ஆலய வழிபாடு செய்தல், சிவனடியாரிடத்தில் அல்லாது பிறரிடத்தில் உணவுகொள்ளாமை, அடியார்க்கு வேண்டுவன கொடுத்தல் என்பன.

அகத்திலக்கணம் பத்தாவன :

> சிவபெருமானைத் துதிக்குமிடத்துக் கண்டம் விம்முதல், சொல் தடுமாறல், இதழ் துடித்தல், உடல் நடுங்கல், மயிர்க்கூச்செறிதல், உடல் வியர்த்தல், நாவெழாமை, கண்ணீர் அரும்பல், வாய்விட்டு அரற்றல், தன்வசம் இழத்தல் என்பன.

இவ்வாறு உபதேச காண்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. இவற்றை உடைய அடியவர் வழிவழி அடியவரான பழவடியாராய் இருத்தல் இன்னும் சிறப்பு என்பதை, "பழவடியீர் பாங்குடையீர்" என்னும் தொடர்கள் உணர்த்துகின்றன.

எழுப்பப்படுகிற பெண்ணொருத்தி "வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ" என்று கேட்பதும், "நானே வந்து உங்களை நானே எழுப்புவன்" என்று முதல்நாட் சொல்லியவள் மறுநாளும் உறக்கத்தினின்று எழாமையும், தென்னு என்னு முன்னம் தீசேர் மெழுகு ஒப்பவளாகிய மிக்க அன்புடைய ஒருத்தியும் ஒருநாள் வன்னெஞ்சப் பேதையர்போல், எழுப்ப எழுப்ப வாளாகிடத்தலும் போல்வன உறக்கத்தின் ஆற்றலைப் புலப்படுத்துகின்றன.

நீர் நிரம்பிய மடு பெருமானும் பெருமாட்டியும்போல் காணப்படுதலைக் கூறுகின்ற "பைங்குவளைக் கார்மலரால்" என்ற பாடலில் இறைவன் குருவாகி வந்து நயன தீட்சை முதலிய தீட்சைகளால் ஆன்மாக்களின் மலங்களைப் போக்கும் குறிப்பு அமைந்துள்ளது. "காதார் குழையாடப் பைம்பூண் கலன் ஆட" என்னும் தொடர்கள் பெண்கள் அணிகலன்களோடே நீராடல் வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றது. "சீதப் புனலாடி" என்பதனுல், விடியற் காலையில் தண்ணீரிலேதான் முழுக வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது. விடியற் காலையில் குளிர்ந்த நீரில் முழுகுவதால் நலன்கள் பல உள்ளன. தண்ணீரில் குளிக்கும்பொழுது குளிர் இருக்கும். குளித்தபின்னர் குளிர் இராது. ஆனல், வெந்நீரில் குளிக்கும்பொழுது குளிர் இராது. பின்பு குளிர் உண்டாகும். தண்ணீரில் குளிப்பதால் காமம் முதலிய குற்றங்கள் உண்டாகமாட்டா. இப்படிப் பல நன்மைகள் உண்டு. இப்பாடலில், "பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை" என்பது இறைவன் எல்லார்க்கும் ஒரேவகையாக அருள் செய்யாமல் அவரவர்கள் தரத்திற்கு ஏற்பப் பலவகையாக அருள்செய்து ஆட்கொள்ளுதலை விளக்குகின்றது. இந்தப் பேதம் (வேறுபாடு) ஆன்மாக்களின் இயல்பு பற்றி உண்டாகின்றதேயன்றி இறைவன் இயல்பு பற்றி உண்டாகவில்லை.

"முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே" என்ற பாடல் இறைவன் கால எல்லையைக் கடந்தும், "பாதாளம் ஏழினுங் கீழ்" என்னும் பாடல் இட எல்லையைக் கடந்தும் நிற்றலை உணர்த்துகின்றன. பெண்கள் சிவபத்தி உள்ளவர்களே தங்களுக்குக் கணவராக வருதல் வேண்டும் என்று கேட்கும் பாடல்கள் சைவ மைந்தரும் மகளிரும் எவ்வாறு இருத்தல் வேண்டுமென்று மாணிக்கவாசகர் விரும்புகின்றார் என்பதைக் காட்டும். அவர்கள் தங்களுக்காகவும் வேண்டுதல் செய்வதும், இறைவன் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் அருள் வள்ளலாய் இருத்தலை விளக்கும் இறுதிப் பாடல் அவனது ஐந்தொழில்களையும் நன்கு எடுத்து ஓதி, 'அவை அனைத்தையும் செய்வன அவனது திருவடிகளே' என அத்திருவடிகளின் சிறப்பை விதந்து போற்றி செய்தலும், "போற்றி யாம் மார்கழி நீராடேலோ ரெம்பாவாய்" என்று மார்கழி நீராட்டை எடுத்துக் கூறி முடிப்பதும் மார்கழி நோன்பிற்கு மிகமிகப் பொருத்தமாய் அமைவனவாகும். 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' என்று திருவாசகத்தில் சிறப்பாக எடுத்துக் குறிக்கப் பட்டமைக்கு ஏற்பப் பல அருமை பெருமைகளை உடைய திருவெம்பாவையைத் திருவாதிரை விழா நாட்கள் பத்திலும், ஓதவும், சிந்திக்கவும் முற்பட்டுள்ள பக்தர்கட்கு ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியும், சிற்றம்பலத்து ஆடும் கூத்தனும் ஆகிய இறைவன் எல்லா நலங்களையும் அருள்வானாக.

---

## பயன் தரும் மலர் - இலை வகை

இறைவனை நாடோறும் இலை – மலர் தூவி இறைஞ்சுதலால் விளையும் பயன்கள் ;—

| | | |
|---|---|---|
| ஞாயிறு | வில்வம் | அட்டமாசித்தி |
| திங்கள் | துளசி | செல்வம் |
| செவ்வாய் | விளா | மகப்பேறு |
| புதன் | மாதுளை | ஞானம் |
| வியாழன் | வங்கமலர் | கல்வி |
| வெள்ளி | நாவல்கொழுந்து | அரசன் |
| சனி | காந்தி | பிணியின்மை |

# பொங்கல் வாழ்த்து

**புலவர். திரு. இரா. செல்வக்கணபதி**

அன்பென்னும் புதுப்பானை அலங்க ரித்து,
ஆர்வமெனும் ஆன்பாலை அதனுள் பெய்து,
இன்புடைய தொண்டென்னும் அரிசி யிட்டு,
எழிலூட்டும் அடக்கத்தை நெய்யாப் பெய்து,
துன்பகல மனமொழிமெய் அடுப்பில் ஏற்றித்,
துயருட்டும் தன்முனைப்பாம் விறகை யிட்டு,
என்புருகத் தவத்தீயை ஏற்றி விட்டால்
எங்கள்பிரான் அருள்பொங்கும்! சமயப் பொங்கல்! 1

ஆடியிலே உழுதிட்டுத் தண்ணீர் பாய்ச்சி,
ஆதவனின் அருள்நம்பி விதைகள் தூவி,
வாடிவிடும் தளிர்போன்ற பெண்கள் எல்லாம்
வயல்இறங்கி நடவுநடக் களைகள் கல்லி,
பாடிமுடி யாத்துயரில் நாட்கள் போக்கிப்
பசித்திருந்த உழைப்பாளர் உள்ளம் எல்லாம்
கூடிவரும் கதிர்அறுக்க எண்ணும் நேரம்
குலவிவரும் பெரும்பொங்கல்! உழவர்பொங்கல்! 2

உழைக்கின்ற ஏழைக்கே உற்ற தோழன்!
உயர்ந்தோங்கும் பைங்கூழ்க்கோ எருவின் மூலம்!
தழைக்கின்ற பாலூட்டிக் குழந்தை தம்மைத்
தாலாட்டி வளர்ப்பதனுல் தாயின் வண்ணம்!
மழைகாக்கும் குடைபோலே மனிதர் வாழ்வின்
மாண்பிற்கு நலஞ்சேர்க்கும் மாட்டை யெல்லாம்
பிழைப்பின்றிப் பாராட்டும் தமிழர் நெஞ்சின்
பெருநன்றி வெளிப்பாடு மாட்டுப் பொங்கல்! 3

எங்கள்பிரான் திருவடிகள் இதயத் தேத்தி
எழிற்காலை நீராடிப் பாவை பாடி
மங்கலமாம் இளம்பெண்கள் நோற்ற வெல்லாம்
மலர்கின்ற பயனாக விளையும் வண்ணம்
பொங்குமெழில் திருநாளாய்த் தைபி றக்க
பொலிவுற்ற மகளிரது நெஞ்சத் தெல்லாம்
தங்குகின்ற பேரின்ப உணர்வின் ஊடே
தழைக்கின்ற அரும்பொங்கல் கன்னிப் பொங்கல்! 4

பொங்கல்விழாத் திருநாளில் பழமை போக்கிப்
புத்துணர்வு பெற்றிடுவோம்; பொலிக பொங்கல்!
மங்கலங்கள் உலகத்தில் மலர்தல் வேண்டி
மனமார உழைத்திடுவோம்; மலர்க பொங்கல்!
எங்கெங்கும் எல்லாரும் எல்லாம் பெற்று
இணைதற்கு வேண்டிடுவோம் எழுக பொங்கல்!
பொங்கலோ பொங்கலென உள்ளம் பொங்கப்
புத்துலகு சமைத்திடுவோம்! பொங்கல் வாழ்க! 5

---

## மாத அபிடேகங்கள்

மாதந்தோறும் பௌர்ணமிதிதி இறைவன் உகந்த திருநாள். இத்திருநாட்களில் பின்வரும் பொருள்களால் அபிடேகம் செய்து வழிபடவேண்டுமென்பது விதி.

| | | |
|---|---|---|
| சித்திரை | — | மருக்கொழுந்து |
| வைகாசி | — | சந்தனம் |
| ஆனி | — | வாழை; மா, பலாக் கனிகள் |
| ஆடி | — | சர்க்கரை |
| ஆவணி | — | அதிரசம் |
| புரட்டாசி | — | திரட்டுப்பால் |
| ஐப்பசி | — | அன்னம் |
| கார்த்திகை | — | தீபார்ச்சனை |
| மார்கழி | — | நெய் |
| தை | — | தேன் |
| மாசி | — | நெய்யில் தோய்த்த அப்பளம் |
| பங்குனி | — | தயிர் |

# ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள்

திருமுறைக் கலைஞர்
**வித்துவான். திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்**

( மலர் 32. இதழ் 1. பக்கம் 34 - இன் தொடர்ச்சி )

## மைசூரில் சுவாமிகளின் சமயத் தொண்டு :

ஸ்ரீ சம்பந்தசரணாலய சுவாமிகள் மைசூர் சமஸ்தானத்தில் பலநாள் தங்கியிருக்கும்போது அரசரால் அனுப்பப்பெறும் உணவுப் பொருளைப் பிறர்கொள்ளத் தாம் ஒரு சிறிதும் உபயோகிக்காமல் மாதுகரி பிட்சை † எடுத்துக்கொண்டு, அங்குத் தமிழ்க் கல்வியையும், சைவ சமயப் பிரசாரத்தையும் பரப்பிவரலானார். தம் உணவுப் பொருளை உபயோகிக்காததை அறிந்த அரசர், "எவ்விதத்திலேனும் நமது அன்னத்தைச் சுவாமிகள் புசிக்கும்படி செய்ய வேண்டும்" என்று நினைத்து ஒருநாள் சுவாமிகள் பிட்சை ஏற்கும் சைவ இல்லங்கள் தோறும் நமது உணவுப் பொருள்களை அனுப்பிவைத்துச் சுவாமிகளுக்குத் திருவமுது செய்வித்தார் என்பர்.

## அரசர் வேண்டுகோளின்படி சுவாமிகள் நூல் இயற்றல் :

சுவாமிகள் அவர்கள் மைசூர் அரண்மனையில் மிகச் சிறப்புடன் இருக்கும்போது ஒருநாள் கர்த்தர் அவர்கள் சுவாமிகளை நோக்கி, முருகக் கடவுளின் திவ்விய சரிதங்களை அருளுமாறு கேட்டுக்கொண்டார். சுவாமிகள் கச்சியப்ப சிவாசாரியார் இயற்றிய கந்தபுராணத்தை மிகநயம்பட பல நாட்கள் விரித்துரைத்தார். அரசர் அவ்வப்போது அதனைக் கேட்டுமகிழ்ந்தார். கந்தபுராணத்தில் மிக ஈடுபட்ட அரசர் சுவாமிகளை வணங்கி "சுவாமீ! கந்தபுராணம் கடல்போல் விரிந்து கிடக்கின்றது; அதனை யாவரும் எளிதில் உணரும் பொருட்டுச் சுருக்கிக் கதைப் போக்குமாறுமல் ஒருநூல் செய்தருள வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். "இதுவும் திருவருட் செயலே ஆகும்" என்று மகிழ்ந்த சுவாமிகள் அரசர் விருப்பத்

---

† மாதுகரி பிட்சை என்பது சைவ சந்நியாசிகளுக்குரிய பிட்சைகளுள் ஒன்று; அது, பிறரை வாதியாமல் பலரிடம் சென்று சிறுகச்சிறுக அன்னம் வாங்கிப்புசிப்பது.

திற்கு இணங்கி, ஒருநன்னாளில், "பொங்கு கந்த புராணச் சுருக்க நூல்" என்ற மங்கல மொழியில் துவக்கி, அடைமொழி மிகுதியுமின்றி அழகாகக் கந்த புராணத்தின்படியே உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம். தேவ காண்டம், தட்ச காண்டம் என ஆறு காண்டமாகப் பகுத்துக்கொண்டு, அவற்றின் 10346 பாடல்களையும் கதையமைப்பு சிறிதும் விடாமல் சுருக்கித் தெய்வமணம் கமழ, பொருட் சுவை, சொற்சுவை பக்திச் சுவை தோன்ற 1048 விருத்தப் பாக்களால் பாடி முடித்துக் கந்த புராணச் சுருக்கம் § எனப் பெயரிட்டார்.

கந்த புராணச் சுருக்கம் பாடி முடிவுற்றபோது சுவாமிகள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை என்பதை, "கந்த புராணச் சுருக்கமும் நிறைந்தது களிப்பால்" எனவரும் தட்ச காண்டம் 226-ஆம் செய்யுளின் அடியினால் அறியலாம்.

அரசர் பிரான் நூல் பாடி நிறைவேறியதைக் கேட்டுப் பெரு மகிழ்ச்சியுற்று, சுவாமிகளை நோக்கி, "புராணத்தை அரங்கேற்றி யருளவேண்டும்" என்று கேட்டுக்கொள்ள, சுவாமிகள், "அது செந்திலாண்டவன் திருமுன் செய்யத்தக்கது" என்றார்கள். மன்னரும் அங்ஙனமே செய்யலாம் என்று கூறினர்.

## செந்தில் நகரில் நூல் அரங்கேற்றல் :

அரசர், அமைச்சர் முதலியோர் புடைசூழச் சுவாமிகளுடன் ஒருநன்னாளில் புறப்பட்டுத் திருச்செந்தூர் அடைந்து சண்முகப் பெருமானைத் தரிசித்து வழிபட்டார்கள். பிறகு அங்கு ஸ்ரீசண்முகப்பெருமான்(செந்திலாண்டவன்) சந்நிதிமுன் பெரும் புலவர்களும், அடியவர்களும் தக்கார்களும் கூடி இருந்த பேரவையிலே அரசர் அமைச்சர் முன்னிலையில் ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள் அவர்கள் தாம் பாடிய 'கந்த புராணச் சுருக்கம்' என்ற நூலை அரங்கேற்றினார்கள். அரங்கேற்றம் மிகச் சிறப்பாய் நிறைவேறியபோது புலவர்கள் அடியவர்கள் முதலியோர்கள் அளவில்லா மகிழ்ச்சி கொண்டு சுவாமிகளைப் போற்றிப்புகழ்ந்தார்கள். அரசரும் பெருமகிழ்ச்சிகொண்டார்.

---

§ இந்நூல் பலராலும் பெரிதும் போற்றப்படுவதோடு, ஐப்பசி மாசத்துக் கந்தர் சஷ்டி ஆறு நாளும் சைவ மக்களால் மிகுதியாகப் பாராயணம் செய்யப்படும் பெருமை வாய்ந்தது; எளிய நடைகொண்டது.

சேக்கிழார்பெருமான், தில்லை நடராசப் பெருமான் தமக்கு 'உலகெலாம்' என்று எடுத்தோதியதைத் தாம் பாடிய பெரிய புராணத்தில் முதல் நடு இறுதி என்ற மூன்றிடங்களில் வைத்துப் பாடிச் சிறப்பித்தது போலவே சம்பந்த சரணாலய சுவாமிகளும் தம் கந்தபுராணச் சுருக்கம் என்ற நூலிலே தமது குருநாதராகிய திருஞானசம்பந்த தேசிகர் அவர்கள் மீது கொண்ட அன்பைக் காட்டும் நிமித்தம் அவர்கள் திருப்பெயரை முதல் நடு இறுதி என்ற மூன்றிடங்களிலும் அமைத்துப் பாடிப் போற்றியுள்ள சிறப்பினைப் பின்வருவனவற்றால் அறியலாம்.

1 கந்தபுராணச் சுருக்கம் - பாயிரம் அவையடக்கச் செய்யுள் 14

(குருமூர்த்திகளின் பெருமை)

"தனக்கிணை தானேயான சம்பந்தன் கமலை வேந்தன்
கனக்கவே என்பால் அன்பாற் கருணைவைத் திடுத லாலே
.............................................. .........."

2 ஷை புராணம் - யுத்த காண்டச் செய்யுள் - 64

(பொழுதுபுலர்ந்த வருணனையில் குருமூர்த்திகளின் வல்லமை)

"கந்த மாமலர்ப் பொதும்பர்சூழ் கமலைமா நகர்வாழ்
எந்தை ஞானசம் பந்ததே சிகன்றனை எதிர்ந்தார்
பந்த ஆணவப் படலம்விண் டிரிந்திடும் படிபோல்
அந்த ரம்புவி மறைந்தபே ரிருள்அகன் றதுவே"

3 ஷை புராணம் - தட்சகாண்டச் செய்யுள் - 227

(குருமூர்த்திகளை வாழ்த்தல்)

"மெத்து இன்ப வியாபக மாகிய
முத்தி தந்தெனை யாட்கொண்ட முன்னவன்
பத்தர் மொய்த்தசம் பந்தன் கமலைவாழ்
அத்தன் வாழி அடியவர் வாழியே"

இவை மூன்றும் சுவாமிகளது நன்றியறிதலைக் காட்டுவனவும் ஆம்.

கந்தபுராணச் சுருக்கம் திருச்செந்தூரில் அரங்கேறியதை, "சீரு லாவிய செந்தில் நகரிடை, ஏரினே(டு) அரங்கேற்றிய(து) இந்த நூல்" எனவரும் தட்சகாண்டம் - 228-ஆம் செய்யுளின் அடிகளால் அறியலாம்.

## மைசூர் கர்த்தர் சுவாமிகளின் துறவுள்ளத்தை வியத்தல் :

சுவாமிகளது கந்தபுராணச் சுருக்கத்தின், கவித்திறம், பக்திச் சுவை முதலியவற்றை அரங்கேற்றத்தில் கண்டு மகிழ்ந்த அரசர்பிரான் ஒருபொற்றட்டிலே பொற்காசுகளையும் நவ ரத்தினங்களையும் நிறைத்துச் சுவாமிகளுக்குச் சன்மானமாக அளிக்க, சுவாமிகள் அதனைப் பெற்று, "இது குருவுக்குப் பிரீதி யாகுக" என்று அப்பால் வைத்தருளினார்கள். பின்னரும் அரசர் அவ்வாறே அளிக்க, "இது சிவனுக்குப் பிரீதியாகுக" என்று சுவாமிகள் வாங்கிப் பக்கத்திலே வைத்தருளினார்கள். அதன் பின்னரும் அரசர் அவ்வாறே அளிக்க, "இதுசிவனடியார் களுக்குப் பிரீதியாகுக" என்று சுவாமிகள் வாங்கி வைத்தருளி னார்கள். இவற்றின் உண்மையினை அறிய விரும்பிய கர்த்தர் அவர்களுக்குச் சுவாமிகள் தமது உடல் பொருள் ஆவி எல்லாம் அடியவரான போதே குருமூர்த்திகளுக்கு ஆயினமையின் தமக்கொரு பற்றும் இல்லை என்பதை எடுத்துக் கூறினார்கள். அரசர் சுவாமிகளது பற்றற்ற துறவுள்ளத்தை அறிந்து வியந்து, சுவாமிகளை நகர்வலம் செய்வித்துத் தரிசிக்க விரும்பி வேண்டினர்.

அப்போது சுவாமிகள், 'எமது குருவாணையின்றி அதற்கு உடன்படேன்" என்று மறுத்துரைத்தனர். அது கேட்ட அரசர் தமது கருத்தைத் தருமையில் எழுந்தருளியிருக்கும் அவரது குருமகாசந்நிதானம் அவர்களுக்கு விண்ணப்பித்து அனுமதி பெற்றுச் சுவாமிகளை மிகச் சிறப்புடன் செந்தில் நகரில் நகர் வலம் செய்வித்து மகிழ்ந்தார்.

சுவாமிகள் முன்னர் குரு லிங்க சங்கமங்களுக்காக வாங்கி வைத்த பொற்றட்டு, பொற்காசுகள், நவரத்தினங்கள் முதலிய வற்றைத் தருமையாதீனத்திற்கே அரசர் அனுப்பி வைத்தார்; ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்கு நாடோறும் பால் அபிஷேகம் செய்ய நல்ல கபிலைப் பசுக்களையும், வேண்டிய சந்தனக் கட்டை களையும் ஆண்டுதோறும் அனுப்பி வைக்கும் ஒரு வழக்கத்தை ஏற்படுத்தினர். அவ்வழக்கம் நெடுங்காலமாக நடைபெற்று வந்தது.

## சுவாமிகள் தருமையாதீனம் அடைதல் :

மைசூர் கர்த்தர் அவர்கள் சுவாமிகள் அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு தமது பரிவாரங்களுடன் தனது நகர் அடைந் தார். பிறகு சுவாமிகள், செந்திலில் சிலநாள் தங்கியிருந்து

செந்திலாண்டவனை வழிபட்டனர். பிறகு ஒருநாள் புறப்பட்டுத் தம் வித்தியா குருவாகிய ஸ்ரீ வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகளைத் தரிசிக்க விரும்பிச் சிந்துபூந்துறைத் தருமையாதீன மடாலயத்திற்கு வந்தார்; அப்போது தம்பிரான் சுவாமிகள் தில்லையிலே சென்று அரனடி அடைந்த செய்தியை அறிந்து வருந்தித் திசை நோக்கித் தொழுதுவிட்டு, மதுரை முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு தருமையாதீனத்தை வந்தடைந்தார்; தன்னுடன் உறையும் திருக்கூட்ட அடியார்களைக் கண்டு வணங்கி மகிழ்ந்தார்.

பிறகு ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள் தமது ஞானசாரியரான ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக சுவாமிகள் மீது பதினொரு பாடல்களில் "சிகாரத்தினமாலை" என்ற ஒரு துதி நூல் பாடிக்கொண்டு குருமூர்த்திகளை அடைந்து தரிசித்து வணங்கி, அப்பாடல்களால் துதித்தார்; மைசூர் சென்று வந்த யாவும் விண்ணப்பித்து மீண்டும் வணங்கினார்; நாடோறும் முக்காலத்திலும் திருக்கூட்ட அடியார்களோடு குருதரிசனம் சிவத்தொண்டு முதலியன செய்துகொண்டு பலநாட்கள் தருமையம்பதியில் இருந்து வந்தார்.

## தில்லை வாசமும் அரனடி அடைதலும் :

ஒருநாள் ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள் தமது குருமூர்த்திகளை வணங்கித் தில்லை நடராசப் பெருமான் தரிசனமும் அங்கு வாசமும் செய்ய விரும்பியதை விண்ணப்பித்து, அவர்கள் அருளாணைபெற்றுச் சிதம்பரம் அடைந்தார்; சிதம்பரம்-ஞானப்பிரகாசகுளத்தின் † தென்மேற்குப் படித்துறை அருகே உள்ள தம் வித்தியா குருவாகிய ஸ்ரீ வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகளின் சமாதியைத் தரிசித்துத் துதித்து வணங்கினார்; ஞானப்பிரகாச குளத்தின் வடமேற்கு மூலை அருகேயுள்ள, தம் ஆதீனமடத்தில் இருந்துகொண்டு நாடோறும் ஸ்ரீ நடராசப் பெருமானைத் தரிசித்து வரலானார். ஒரு நன்னாளில் ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள் இறைவன் திருவடி நிழலை அடைந்தார்கள்.

---

† இக்குளம் ஞானப்பிரகாச முனிவரால் வெட்டப்பட்டது. இவர் யாழ்ப்பாணம் சைவ வேளாளர். சிதம்பரத்தில் வந்து வசித்தவர். திருவண்ணாமலை ஆதீனத்தில் சைவ சந்நியாசம் பெற்றவர்; வடமொழி தென்மொழிகளில் வல்லவர். சிவஞான சித்தியாருக்கு ஒரு உரை எழுதியவர்; கி. பி. 16-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியினர்.

**சுவாமிகளின் காலம் :**

ஸ்ரீ வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகளிடம் சம்பந்தசரணாலய சுவாமிகளும், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளும் கல்வி பயின்றனர் என்றும், தருமை ஆறுவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளிடம், சம்பந்த சரணாலய சுவாமிகளும் நெல்லைப் பதி அறச்சாலைமடத்துத் தமிழாகரமுனிவரும் ஞானோபதேசம் பெற்றனர் என்றும் வரலாற்றால் அறியக்கிடக்கின்றன.

சிவப்பிரகாச சுவாமிகள் பிரபுலிங்கலீலை என்னும் நூலை, கி. பி. 1652 - ல் இயற்றினர் என்பதும், தமிழாகர முனிவர் பிராயச்சித்தசமுச்சயம் என்னும் நூலைக் கொல்லம் ஆண்டு 808 - (கி. பி. 1633) ஆங்கீரச மாசிப்பௌர்ணமி அன்று இயற்றினர் என்பதும் அவ்வந்நூல்களினின்றும் தெரிகின்றன. ஆகவே, ஸ்ரீ சம்பந்தசரணாலய சுவாமிகள் தமிழ் நாட்டில் வதிந்த காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்னலாம்.

---

## பார்வையாளர் குறிப்பு

தருமையாதீனம்

**ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி.**

தூய்மையாகப் பேணிப் புனிதமாக வைக்கப்பட்டுள்ள இந்தக் கோயிலுக்கு இன்று குடும்பத்துடன் வந்து மிகுந்த ஆனந்தம் பெற்றேன். தருமை ஆதீனத்தின் நிர்வாகத் திறமைக்கு இந்தக் கோயில் மிக அழகானசான்று கோவில் மேலாளரின் பணியைப் போற்றுகிறேன்.

15—10—72 (Sd) மீ. ப. சோமசுந்தரம்.

x x x x

“ நல்ல பராமரிப்புள்ள இத் திவ்ய க்ஷேத்திரத்தில் மனம் குளிர தரிசனம் கிடைத்தது எங்கள் பாக்யம் ”

(Sd.) நஞ்சப்பன்,

District & Sessions Judge,

20—12—72. Nagappattinam.

# “ சேந்தனாரும் திருவிசைப்பாவும் ”

புலவர், திரு. இரா. செல்வக்கணபதி,

## பஞ்சபுராண மரபு :

சிவத்தளிகளில் பஞ்சபுராணம் பாடி வழிபாடு நிகழ்த்துதல் என்ற மரபு எக்காலத்தே தோற்றங்கொண்டதென அறியமுடிய வில்லை. பன்னிரு திருமுறைகளும் தொகுக்கப்பெற்ற நெடு நாட்களுக்குப் பிறகே இவ்வழக்காறு தோன்றியிருக்கக்கூடும் என எண்ண இடமிருக்கிறது. தேவாரம், திருவாசகம், திரு விசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்ற ஐந்தினை யும் பஞ்சபுராணம் என்று வழங்கி வருகின்றனர். இவற்றை ஐந்து திருமுறை என்றோ, பஞ்ச திருமுறை என்றோ குறிப் பிடாது 'புராணம்' என்று குறித்ததை நோக்க புராணங்கள் மிகுதியாகக் கிளைத்த பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண் டில் இக்குறியீடும், வழக்காறும் தோன்றியிருக்கலாம் என்ற முடிவுக்கு வரமுடிகிறது அப்பர் தேவாரம், திருவாசகம் இவற் றுள் புராணம் என்ற ஆட்சி இடம் பெற்றிருப்பினும், தேவார, திருவாசகங்களைப் புராணம் என்ற குறியிட்டால் அழைத்ததாகச் சான்றில்லை. எவ்வாறாயினும், இன்றும் பஞ்சபுராணம் ஓதி வழிபடும் மரபு சிவாலயங்களில் மேற்கொள்ளப்பட்டு வருவது கண்கூடு.

## சேந்தனார் சிறப்பு :

பஞ்சபுராணம் என்ற அமைப்பில் ஒன்பதாம் திருமுறைக்கு ஒரு சிறப்புத் தரப்பெற்றிருக்கிறது. திருவிசைப்பா - திருப் பல்லாண்டு என்ற இருபகுதிகளும் ஓதப்படுவது இச்சிறப்பாகும். ஓதி வழிபடும் இசைப்பாடல்களாக அமைந்தமை திருவிசைப்பா விற்கும், வைணவ மரபை ஒட்டிய எண்ண விரிவு திருப்பல் லாண்டிற்கும் இத்தொகுப்பில் இடமளித்திருக்கக் கூடுமென நம்பலாம். இவ்வகையில் ஒரே ஒரு பதிகமாகப் பதின்மூன்று பாடல்களில் இறைவர்க்குத் திருப்பல்லாண்டிசைத்த சேந்தனார் பெருஞ்சிறப்புப் பெறுகிறார். தேவார மூவர்களோடும், மணி வாசகரோடும் ஒப்பவைத்தெண்ணத்தக்க பெருஞ்சிறப்புடைய வராகப் பஞ்சபுராண வழிபாட்டால் மதிக்கப்பெறும் சேந்தனார்

அருளிய திருவிசைப்பாப் பதிகங்கள் மூன்றும் ஒன்பதாம் திருமுறையுட் காணப்படுகின்றன. சேந்தனாரை அவர்தம் திருவிசைப்பாப் பதிகங்களோடு வைத்து எண்ணுவது நோக்கமாக இக் கட்டுரை மலர்கிறது.

## சேந்தனார் யார் ?

திவாகரம் என்ற நிகண்டின் தோற்றத்திற்கு ஆக்கம் நல்கிய குறுநிலத்தலைவன் ஒருவன் சேந்தன் என்று பேசப்படுகிறான். இருமொழி வல்லமை பெற்றவனாகத் திவாகரர் இவனைக் குறிக்கிறார். இறைவனது இடப்பாகத் தமர்ந்த பெருமாட்டிக்கு இவன் செந்தமிழ்ப் பாமாலை புனைந்தான் என்றும் கேட்கப் படுகிறது. இவனையன்றிப் பொன்பற்றி நகர்க் காவலன் சேந்தன் என்பானோர் குறுநிலத்தலைவனை வீரசோழிய உரையில் காண்கிறோம். இவன் பௌத்தநெறி நின்றவன் என்று குறிப்பிடப்படுகிறது. இவ்விருவரினும் வேறாகவே திருவிசைப்பா இசைத்த சேந்தனாரைக்கொள்ள வேண்டியிருக்கிறது. இறைவனது அன்பிளம் மதலையாகிய முருகப்பெருமானுக்குத் தனிப் பதிகம் அருளியுள்ள சேந்தனார் ஒன்பதாம் திருமுறை ஆசிரியர். திவாகரர் குறிக்கும் சேந்தனே பெருமாட்டிக்குப் பாமாலை புனைந்தவனாகக் குறிக்கப்படுகிறான். வீரசோழியத்திற் காணக் கிடப்பவனே பௌத்தநெறி நின்றவன். இவற்றோடு கால ஆராய்ச்சியும் இவ்விருவரின் வேறாகவே சேந்தனாரை எண்ண வைக்கிறது.

## செவிவழிச் செய்திகள் :

செவிவழிச் செய்திகளும், சில தனிப்பாடல்களும் மட்டுமே திருவிசைப்பாச் சேந்தனார்க்கு வரலாறு காட்டுகின்றன. அவற்றில் பெரும்பகுதி பல பெருமக்களது வரலாற்றின் சாயலில் கட்டிக்கொள்ளப்பட்டதாகவே தோன்றுகின்றன. செவிவழிச் செய்திகள் சேந்தனாரைப் பட்டினத்தாரின் கணக்கர் என்றும், அடிகள் கட்டளையை நிறைவேற்றிய செயல் ஒன்றிற்காக இவர் மன்னனால் சிறைவைக்கப்பட்டார் என்றும், பட்டினத்தார் 'மத்தளைத் தயிர்...' என்று தொடங்கும் பாடல் இசைத்து வெண்காட்டிறைவனை வழிபட, விநாயகர் சேந்தனாரைச் சிறை மீட்டருளினார் என்றும், இவர் தில்லையில் விறகு விற்று வாழ்ந்தார் என்றும், மன்னனுக்கு இறைவனே இவர் பெருமை உணர்த்தியருளினான் என்றும், தில்லைத் திருத்தேரை ஆதிரைத் திருநாளில் இறைவன் கட்டளைப்படி சேந்தனார் திருப்பல்லாண்டிசைத்து நிலைசேர்த்தார் என்றும், இன்னும் பலவாறும்

கூறுகின்றன. பெரியபுராணத்தில்காணக்கிடக்கும்கழறிற்றறிவார் முதலிய பெருமக்களது வரலாற்றுச் சாயலில் இவை யாவும் புனைந்து கொள்ளப்பட்டன என்றே தெரிகிறது. அடிப்படையற்ற இத்தகு வரலாற்றை உருவாக்கிக்கொண்டு மகிழ்வதால் சேந்தனரின் திருவிசைப்பாவிற்கு வரத்தக்க ஏற்றம் ஏதுமில்லை. பெருமக்களை அவர்களது படைப்பின் மேல்நின்று நோக்கி அறிவதைவிட, காணத்தக்க அல்லது காண வேண்டிய வரலாற்றுச் செய்திகள் பயன்தரத்தக்கனவல்ல.

### சேந்தனர் காலம் :

இறைவனது பேரன்பிற்குரியராகிய இவரது சிறப்பினைக் கோயில் திருப்பண்ணியர் விருத்தத்தில் நம்பியாண்டார் நம்பிகளும், திருக்களிற்றுப்படியாரில் உய்யவந்ததேவ நாயனரும், சிவஞான சுவாமிகள் தனது தனிப்பாடலுள்ளும் விளக்கியுள்ளனர். இம் மூவர் பாடலும் சேந்தனரைத் தில்லையோடு உறவு படுத்திச் சிறப்பிப்பினும், திருப்பல்லாண்டு தவிர, தில்லையில் அருளிச் செய்யப் பெற்றதாகச் சேந்தனரின் திருவிசைப்பாப் பதிகம் ஒன்றும் காணப்படாமை வியப்பினைத் தருவதாகவே அமைகிறது. திருத்தொண்டத் தொகையில் சேந்தனர் பாராட்டப் பெருமையாலும், நம்பியாண்டார் நம்பிகள் இவரைக் குறிப்பதாலும், இவ்விரு பெருமக்கள் காலத்திற்கும் இடைப்பட்டவராக இவரைக் குறித்தலன்றித் துல்லியமான காலக்கணக்கீடு செய்ய முற்படுவது கற்பனையாகவே முடியும்.

'செப்புறைச் சேந்தன்' எனச் சேந்தனரும், 'நாங்கூர்ச் சேந்தன்' எனப் பட்டினத்தார் பெயரில் வழங்கும் பாடலும் குறிப்பதாலும், பிடவூர் என்ற ஊர் ஒன்று இவரது திருவிடைக்கழி திருவிசைப்பாவில் குறிக்கப்படுதலானும் இவர் சோழநாட்டின் கடற்கரையை ஒட்டிய நாங்கூர், பிடவூர் முதலிய பகுதிகளில் வாழ்ந்திருந்தவராகக் கொள்ளக்கூடும். 'செப்புறை' என்பது ஊரா அன்றிக் குருமரபா என அறியக்கூடவில்லை.

### அழகநுபவம் :

ஞானசம்பந்தர்க்கும், அப்பர் பெருமானுக்கும் படிக்காசு அருளிய வீழிமிழலை இறைவரையும், பிள்ளையார்க்கு 'அம்பொன் ஆயிரம்' அளித்த ஆவடுதண்துறை அரனரையும், இடைக்கழி வாழும் இறைவன் இளமதலையையும் மூன்று திருவிசைப்பாப் பதிகங்களுள் முப்பத்து நான்கு திருப்பாடல்களால் சேந்தனர்

பாடிப்பரவுகிறார். அன்பின் வெளிப்பாடாய் அமைந்த இவ் வமுதப் பாடல்களின் பொருள் நலன்களை எல்லாம் முற்றக்காட்ட வல்ல வன்மை நமக்கு உண்டோ ? அவை எல்லாம் ஓர் அழகநுபவம் : ஆழங்காண முடியாத அன்பின் வெளிப்பாடு, சொற் கடந்த மோன நிலை.

### விழிமிழலை விருந்து :

விழிமிழலை எம்பெருமான், தானே ஏகநாயகனாய் - போக நாயகனாய் - மேகநாயகனாய் - யோகநாயகனாய் விளங்குகையில், வேறும் ஓர் வல்லமை படைத்த தெய்வம் ஒன்று உண்டு என்று என் உணர்வு ஒப்பவும் மறுக்கிறது என்று தொடங்கி, அப் பெருமான் கற்றார்க்குக் கற்பகக் கனியாகவும், மற்றவர்க்கு அறிய மாட்டா மாணிக்க மலையாகவும் விளங்கும் வல்லமை காட்டி, மதிப்பார் உள்ளத்தே மணிவிளக்காகத் திகழும் விழிமிழலைப் பேரிறைவனின் கருணைவிதந்து, தம்மை ஆளுடைக் குருமணியாகவும், புராண சிந்தாமணியாகவும் விளங்கும் இறைவன் திறம்பேசி, ஐவரோடு அழுந்தி யான் அவமே புக்கிடா வண்ணம் காத்தெனை ஆண்ட புனிதன் என வீழிமிழலையான் அருட்டிறம் சுட்டி, அவன் மறத்தற்கரியவன் என்றும், தேவர்களும் போற்றும் திறத்தினன் என்றும், எண்ணில் பல்கோடி யாவுமாய்த் திகழும் எம்பிரான் என்றும், பாராட்டிப் புகழும் சேந்தனார், 'சேந்தன் தாதை'யாகிய அவனைக் களங்கொள அழைத்தால் பிழைக்குமோ என வினவி, இறைவன் திருஞான சம்பந்தர்க்கும், திருநாவுக்கரையருக்கும் படிக்காசருளிய திறத்தை,

"பாடலங்காரப் பரிசில்கா சருளிப்
பழுத்தசெந் தமிழ்மலர் சூடி
நீடலங்காரத் தெம்பெருமக்கள்
நெஞ்சினுள் நிறைந்து நின்றானை..."

என்று வியந்து போற்றி நிறைவிக்கும் திறம் பெருஞ்சிறப்பாக அமைகிறது. பன்னிரு பாடல்களைக் கொண்ட இத்திருப்பதிகத்துள் தேவார - திருவாசகங்களின் சொல்லும் பொருளும் இழையோடும் அருமைப்பாடு வெளிப்படையாகவே விளங்கித் தோன்றுகின்றது. சேந்தனாரின் மூன்று திருவிசைப்பாப் பதிகங்களுமே பஞ்சமப்பண்ணில் அமைந்திலங்குகின்றன.

சேந்தனார் அருளிச்செய்த 'பொய்யாத வேதியர்' என்று தொடங்கும் திருவாவடுதுறைத் திருவிசைப்பா, திருமாளிகைத் தேவரின் தில்லைத் திருவிசைப்பாவாகிய 'உறவாகிய யோகம்'

என்னும் பதிகம் போலச் செவிலி கூற்றாக அமைந்துள்ளது. அந்தாதித் தொடையமையப் பெற்ற இப்பதிகத்துள் திருவாவடுதுறையுள் எழுந்தருளி விளங்கும் பெருமானைக்கண்டு காதல் கொண்ட இளமகள் ஒருத்தியின் பேச்சும் செயலும் நயம்பட எடுத்துரைக்கப்பட்டுள்ளன. திருவாவடு துறை என்பது கோயிற்பெயர் என்பதுவும், ஊர்ப்பெயர் சாந்தையூர் என்பதுவும் 'அழிவொன்றிலாச் செல்வச் சாந்தையூர் அணி ஆவடுதுறை' என்ற பாடற் பகுதியால் விளக்கமுறுகிறது.

இத்திருப்பதிகத்துள் திரிபுரசங்கார காலத்தில் தேவர்கள் மேற்கொண்ட பங்கு இன்னது என்பதனைச் சுட்டும் பாடல் நினைவு கூரத்தக்கது. திருவாவடுதுறை இறைவனை, மணவாள நம்பி, தருணேந்து சேகரன், குணக்கடல், கருணையன், நவலோக நாயகன் என்ற பல பெயரிட்டுச் சேந்தனார் வழங்கும் அருமையை இங்கே காண முடிகிறது. பதினொரு பாடல்களால் அமைந்த இப்பதிகத்துள் தேவாரம் போல இறுதிப்பாடல் பயன் விளக்கமாக அமையாது, ஏனைய பாடல்களோடு ஒத்த பொருள் தந்து நிற்றல் சிந்தனைக்குரியது.

## முருக வழிபாடு :

சிவபெருமானை அன்றி உமையம்மைக்குக் கூடத் தனியாகப் பாடல் அருளிச் செய்யாத உறுதிப் பாட்டைத் தேவாரத்துள் காண்கிறோம். திருவாசகம் ஓரளவு உமையம்மைக்கு இடந் தந்து அருளிச் செய்யப்பெற்றது. விநாயகர், முருகன் போன்ற இறையவர்கள் தேவார திருவாசகத்துள் சார்த்து முறையால் அன்றித் தனியே பாடப்பெற்றிலர்.

'இடர்கடி கணபதி வர அருளினன்' என ஞானசம்பந்தரும்,

'நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்' எனவும்,

'நம் செந்தில் மேய வள்ளிமணாளர்க்குத் தாதைகண்டாய்'

எனவும் அப்பர்பெருமானும் சார்த்து முறையில் விநாயகர், முருக வழிபாடுகளைப் பேசுதலைக் காணலாம்.

முருகப் பெருமானுக்கென்றே, தனிப்பதிகம் அருளிச் செய்த சிறப்பு, திருமுறைகளைப் பொறுத்த வரைமுதன்முதல் சேந்தனாரையே சாரும். 'மாலுலா மனந்தந்து' என்று தொடங்கும் திருவிடைக்கழித் திருப்பதிகம் முழுதும் முருகப்பெருமானது

திருவருளேயே விதக்கிறது. பதினொரு பாடல்களால் அமைந்த இப்பதிகமும் அந்தாதித் தொடையாய்ச் செவிலி கூற்ருய் விளங்கக் காண்கிறேம். 'கொழுந்திரள் வாயார் தாய் மொழியாக' என்ற இப்பதிகத்தின் இறுதிப்பாட்டே இதனை விளக்குகிறது' முருகப்பெருமானின் பேரழகில் மையலுற்று வருந்தும் மகள் ஒருத்தியின் ஆற்ருமை இங்கே செவிலி கூற்றில் விளக்கப்படுகிறது.

தேவர் குலமுழுதாண்டு தேவசேனுபதியாக விளங்கும் முருகவேள், வள்ளி மணுளனுகச் சிறந்து திருவிடைக்கழியில் திருக்குரா நிழலில் சேந்தன் என்னும் நாமம் பூண்டு அருள் வழங்குகின்ருன். அவன் 'கோழிவெல் கொடியோன்; மாமயில் ஊர்ந்து வருகின்ருன்; சுப்பிரமணியன் என்னும் திருநாமம் பூண்டோன்; சூர் முதல் தடிந்தோன்; கங்கை தன் சிறுவன்; கணபதிக்குப் பின்னேன்; மால் திருமருகன்; பல்வேறு நாமம்; பூண்டோன் (தொகைமிகு நாமத்தவன்) பன்னிரு நயனத்தான்; அறுமுக அமுது, என்றெல்லாம் சேந்தனர் முருகப்பெருமானின் பல்வேறு சிறப்பியல்புகளை எடுத்தோதி வியக்கும் அருமைப்பாடு சிறப்பாக அமைகிறது.

## குராப்பள்ளி எது ?

திருவிடைக்கழி மாயூரம் வட்டத்தில் மாயூரம் தரங்கம்பாடி புகைவண்டிப் பாதையில் தில்லையாடிக்குத் தெற்கே இரண்டுகல் தொலைவில் உள்ள சிற்றூர். இத்தலத்தின் தலவிருட்சமாக விளங்குவது குரா மரமாகும். குராப்பள்ளித்துஞ்சிய பெருந் திருமாவளவன் என்ற கடைச்சங்க காலச் சோழ மன்னனது பள்ளிப்படை திருவிடைக்கழிக்கு அருகில் வீரசோழனுற்றங்கரையில் அமைந்துள்ளதாக நம்பப்படுகிறது. இவற்றை வைத்தெண்ணுங்கால் குராப்பள்ளி என்பது இச்சிற்றூராகவே இருந்திருக்க வேண்டுமென்று எண்ணத் தோன்றுகின்றது.

சேந்தன் என்ற முருகப் பெருமானின் பெயர் கொண்ட அருளாளர் முருகப்பெருமானுக்குப் பாமாலை பாடிப் புனைந்ததில் வியப்பில்லை. இவ்வாறெல்லாம் பல்வேறு சிறப்பியல்புகளோடு புதிய சிந்தனைகளை வழங்கும் சேந்தனரின் திருவிசைப்பா, ஒன்பதாந் திருமுறையில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்வது பொருத்தமாகவே அமைகிறது.

# உத்தராயணம்

சாகித்திய சிரோமணி, ஆகமப்பிரவீணர்.

**சிவஸ்ரீ. V. சந்திரசேகர குருக்கள்**

தை பிறந்தால் வழி பிறக்கும் என்று பெரியவர்கள் கூறுவார்கள். அது மனிதர்களுக்கு மட்டுமல்ல. தேவர்களுக்கும் நல்ல வழி பிறந்து விட்டது என்றே கூறலாம். தக்ஷிணாயனத்தில் தென் திசையில் உள்ள வழியாச் செல்லும் சூரியன் தை பிறந்ததும் வடதிசையில் உள்ள பாதையில் செல்லத் தொடங்குகிறான். தென் திசைக்கு "யாம்யம்" (எமன் ஆட்சி செய்யும் திக்கு) என்று பெயர். எமன் என்ற சொல்லைக் கேட்பதற்கே பயமாக இருக்கிறது; அது போல் அவன் வசிக்கும் திசையும் பயங்கரமானதே. சுபகாரியங்கள் செய்யும் பொழுதும், ஜபம் செய்யும் பொழுதும், இறைவனை அருச்சிக்கும் பொழுதும் தெற்கு நோக்கிச் செய்யக்கூடாதென ஆகமங்கள் கூறுகின்றன. வட திசைக்கு 'கௌபேரம்' (குபேரன் ஆட்சி செய்யும் திசை) என்று பெயர்; நவ நிதிகளுக்கும் அதிபதியாய்ப் பொருளை வழங்குபவன் குபேரன். அது மட்டுமல்ல; தென்முகக்கடவுளாய் நமக்கு அருளை வழங்கும் சிவபெருமான் இருப்பதும் வடதிசை. ஆகவே, அருளையும் பொருளையும் வழங்கும் திசை வடதிசை. சுபகாரியங்கள் செய்யும் பொழுதும், ஜபம் செய்யும் பொழுதும், கடவுளை அருச்சிக்கும் பொழுதும் வடக்கு நோக்கிச் செய்ய வேண்டுமென ஆகமங்கள் கூறுகின்றன. இவ்வளவு சிறப்பு வாய்ந்த வடதிசையில் உள்ள வழியாகச் சூரியன் செல்லுவதால் உலகில் எல்லாருக்கும் நல்ல வழி பிறந்தது என்று சொல்லாம்.

தக்ஷிணாயனத்தில் இருள் சூழ்ந்திருந்த தேவலோகம், உத்தராயணத்தில் சூரிய ஒளி பரவிப் பிரகாசிக்கத் தொடங்குகிறது. சூரிய உதயம் முதல் மறுநாள் சூரியன் உதிக்கும் வரை உள்ள காலத்திற்கு ஒரு நாள் என்று பெயர்; இப்படி முந்நூற்று அறுபத்தைந்து நாட்கள் கொண்டது மனிதர்களுக்கு ஒரு வருஷமெனப்படும். இந்த ஒரு வருஷம் தேவர்களுக்கு ஒரு நாளாகும்.

मकरायन्तु षण्मासं देवानान्तु दिवास्मृतः ।
कर्कटायन्तु षण्मासं देवरात्रिरितिस्मृतः ॥

தேவர்களுக்குத் தை மாதம் முதல் ஆனி மாதம் முடிய ஆறு மாதம் பகற் காலமாகவும், ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் முடிய ஆறு மாதம் இராக்காலமாகவும் கூறப்படும்.

மனிதர்களுடைய கால அளவுப்படி உள்ள ஒவ்வொரு மாதமும் தேவர்களுக்கு ஐந்து நாழிகையாகும்; அதாவது இரண்டு மணி நேரமாகும். அப்படிப் பார்க்கும்பொழுது தைமாதம் காலை ஆறு மணிமுதல் எட்டு மணிவரை உள்ள காலத்தைக் குறிக்கும். மார்கழி மாதம் இரவு நான்கு மணிமுதல் காலை ஆறு மணிவரை உள்ள காலத்தைக் குறிக்கும். விடியல் 4 மணிமுதல் 6 மணிவரை தேவர்களுக்கு உஷக்கால பூசை செய்யவேண்டிய காலமாகும்.

पञ्चविंशत्युषः कालामुत्तमन्तु विधीयते ।

இரவு நான்கு மணிக்கு உஷக்கால பூசை செய்வது உத்தமமெனக் கூறப்படுகிறது.

நாம் ஆலயங்களில் கொண்டாடும் திருவிழாக்களும் விசேஷ பூசைகளும் தேவர்கள் இறைவனை வழிபட்டு அவனருளைப்பெற்ற வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டுள்ளவை. ஆகையால் மார்கழி மாதத்தில் செய்யப்படும் திருப்பள்ளியெழுச்சிப் பூசையும் தேவர்கள் செய்யும் உஷக்கால பூசையை நினைவுபடுத்துவதாகும்.

सहस्रवार्षिकी पूजादिनमेकेन लभ्यते ।

மார்கழிமாதத்தில் ஒருநாள் திருப்பள்ளியெழுச்சி பூசை செய்வதால் ஆயிரம் ஆண்டுகள் பூசைசெய்த பலனை அடையலாமென ஆகமம் கூறுகிறது.

உஷக்கால பூசைக்கு அடுத்தது காலசந்தி பூசை செய்யும் காலமாகும். உத்தராயணத்தின் ஆரம்பமான தைமாதம் தேவர்களுக்கு சூரியன் உதிக்கும் காலமாகவும் காலசந்தி பூசைசெய்ய வேண்டிய காலமாகவும் அமைந்துள்ளது. காலசந்தி பூசையில் முதலில் சூரியனுக்குப் பூசை செய்த பிறகே மூல இலிங்கத்திற்குப் பூசைசெய்ய வேண்டும். அந்த முறைப்படி தைமாதம் முதல் நாள் சூரிய பூசை செய்வது அமைந்திருக்கின்றது. மறுநாள் மாட்டுப் பொங்கலன்று பசுவிற்குப் பூசை செய்கிறோம். இது ஆன்மார்த்த பூசை செய்யவேண்டிய முறையை உணர்த்துகிறது. ஆன்மார்த்த பூசையைச் சூரிய பூசையில் தொடங்கிச் சண்டேசுவர பூசைவரை முடித்து, அதன்பின் பசுவிற்குப் பூசைசெய்து பிறகு போசனம் செய்யவேண்டுமெனக் கூறப்படுகிறது. ஆகவே பெரும்பொங்கல், மாட்டுப்பொங்கல் இரண்டு நாட்களும் சிவபூசை செய்யவேண்டிய முறையையே உணர்த்துவதாக அமைந்துள்ளது. உழைப்பினால் துன்பத்தை அனுபவிக்கும்காலம் தக்ஷிணாயனம். அந்த உழைப்பின் பலனை அடைந்து அனுபவித்து மகிழும் காலம் உத்தராயணம். புதிதாக நமக்குக்கிடைத்த தானியங்களையும், கறிகாய்களையும் பாகம் செய்து முதன்முதலில் ஆண்டவனுக்குப் படைத்து, மகிழும்நாள் ஆனதால்

உத்தராயண புண்ணியகாலம் பொங்கற் பண்டிகையாக விளங்குகிறது.

पुष्यमासादि षाण्मासं प्रशस्तं चोत्तरायणम् ।
आषाढादि च षाण्मासं अशस्तं दक्षिणायनम् ॥

தேவதா பிரதிட்டை, விவாஹம் முதலான சுபகாரியங்களுக்கு தைமாதம் முதலாக ஆனிமாதம் வரை உள்ள உத்தராயணம் சிறந்தது; ஆடி மாதம் முதலாக மார்கழி மாதம் முடிவாக உள்ள தக்ஷிணயனம் சிறந்ததல்ல' என்று ஆகமத்தில் கூறப்படுகிறது. நாம் எப்படி சூரியோதயத்தை முக்கியமாகக்கொண்டு நாட்களை எண்ணுகின்றோமோ அப்படியே தேவர்களுக்கும் சூரியோதய காலமான தைமாதத்தை முதலாகக்கொண்டு நாட்கள் பேசப்படுகின்றன.

पुष्यमासादि संयुक्तं मार्गशीर्षकमन्तकम् ।

தைமாதத்தை முதலாகவும் மார்கழி மாதத்தை இறுதியாகவும் வைத்து மாதபூசை முதலானவைகளைச் செய்யவேண்டும் எனக் கூறப்படுகிறது. இதற்கு ஸ்தூலமாதம் என்றுபெயர். சித்திரை மாதத்தை முதலாகவும் பங்குனியை இறுதியாகவும் வைத்து எண்ணப்படுவது சூக்ஷ்ம மாதம் எனப்படும்.

अधस्तात् विंशतिः कर्क्यां मकरेपिपरे तथा ॥

ஆடிமாதப்பிறப்பு, தைமாதப்பிறப்பு இந்த இரண்டுமே புண்ய காலமெனக் கூறப்பட்டபோதிலும் தைமாதப் பிறப்பிற்கு அதிக விசேஷம் உண்டு. ஆடி மாதத்தில் சூரியன் கடகராசிக்கு வருவதற்கு முன்பு இருபது நாழிகை, அதாவது உத்தராயணத்தில் இருக்கும் பொழுதே தக்ஷிணயன புண்யகாலமென்றும், தை மாதத்தில் மகரராசிக்கு வந்தபிறகு அதாவது தக்ஷிணயனத்தை விட்டு விலகிய பிறகு புண்யகாலமென்றும் கூறப்படுகின்றன. பாரதப் போரில் அடிபட்டுக் கிடந்த பீஷ்மர், பரலோகம் செல்வதற்கு உத்தராயணம் வருமளவும் காத்திருந்ததாகக் கூறப்படுகிறது. ஆகவே எல்லாக் காரியங்களுக்கும் உத்தராயணம் சிறந்ததாகப் பேசப்படுகிறது.

दानं प्रदक्षिणं होमं तीर्थमध्ययनादिकम् ।
यजनं चैव तत्काले कारयेत् सर्वसंपदम् ॥

இந்த உத்தராயண புண்ணிய காலத்தில் தானம் கொடுத்தல், ஆலயத்தை வலம் வருதல், ஹோமம் செய்தல், புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தல், வேதம் ஓதுதல், இறைவனை அருச்சித்தல் இவை முதலானவைகள் செய்வதால், சமஸ்தமான ஐசுவரியத்தையும் அடையலாமென ஆகமத்தில் கூறப்படுகிறது. ' ஆகவே, வருகிற உத்தராயணத்தில் அத்தகைய பயனை அனைவரும் அடைய இறைவன் அருள்புரிவானாக.

# கோ பூஜை

சிரோமணி

சிவஸ்ரீ. S. பாலசுப்பிரமணிய குருக்கள்

கடவுளை அடைவதற்குப் பல உபாயங்களை வேத ஆகம புராணங்கள் கூறுகின்றன. அவற்றுள் கோ பூஜையும் ஒன்று

முற்காலத்தில் மனிதர்களுக்குப் பசுக்களே செல்வங்களாக இருந்தன. நம் முன்னோர்கள் இல்லறநெறியான ஈகை, விருந்தோம்பல் முதலிய நற்செயல்களைச் செய்து நன்மை பெறுவதற்கும், வேள்விகள் செய்துவெற்றி காணவும் பசுக்கூட்டங்கள் அவர்களுக்கு உறுதுணையாக இருந்தன. நீங்காத செல்வமாகிய பசுக்களிடம் நம் முன்னோர்கள் கடவுளின் ஸ்வரூபத்தையே கண்டார்கள். பசுக்களை இறைவனது அருள்வடிவமாகவே கண்டனர். மேலும் அந்தப் பசுக்களின் சிறப்பும், அதை வழிபடும் முறையும் நமது வேதாகமங்களிலும் ஸ்மிருதி, புராணங்களிலும் எவ்வாறு கூறப்படுகின்றன என்பதைக் கவனிப்போம்.

## கோக்களின் சிறப்பு

" கோப்ய பவித்ரம்லோகேஸ்மிந் நகிஞ்சிதபிவித்யதே "

பசுக்களைக் காட்டிலும் பவித்ரமான வஸ்து இந்தலோகத்தில் வேறொன்றுமில்லை என்று புகழ்ந்து கூறுகிறது அஜிதாகமம்.

வேதத்தில்: 'வேள்விகள் செய்வதற்குப் பசுவினிடமிருந்து பால் நெய் முதலியன முக்கிய திரவ்யமாகப் பயன்படுவதால் உண்டாகும் "மாத்வீர் காவோ பவந்துந" என்று வேதம் சிறப்பித்துக் கூறுகிறது. 'சுவையான பாலைப் பசுக்கள் நமக்குக் கொடுக்கட்டும்' என்பது அதன் பொருள்.

புராணங்களில்: அந்தணர்களும், அறம்செய்யப் பேராதரவாயிருக்கும் பசுக்களும் வாழவேண்டுமென்று நம்முன்னோர்கள் இறைவனை வேண்டினர். பசுக்கள் பதினான்கு உலகங்களையும் தன் பதினான்கு உறுப்புக்களாகக் கொண்டுள்ளனவாதலால், அவற்றைத் தானம் கொடுப்பது தானங்களில் சிறந்த தானம் என்று பண்டைய நூல்கள் கூறுகின்றன.

"கவாம் அங்கேஷு திஷ்டந்தி புவனுநி சதுர்தச
தஸ்மாதஸ்யப்ப்ரதானேன அதச்சாந்திம்ப்ரயச்சமே"

என்ற சுலோகம், மேற்கூறியதை விவரிக்கும்.

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" என்று திருஞானசம்பந்தரும், "ஆவினில் ஐந்தும் அமர்ந்தாய் நீயே" "அத்தேனை அமுதத்தை ஆவின் பாலை" என்று அப்பரும் அருளியவற்ருல் பசுக்களின் சிறப்பு நன்கு அறியப்படுகிறது.

ஸ்மிருதியில்:

ஸௌரபேய்யஸர்வஹிதா: ஸர்வபாப ப்ரணுசநா: I
பாதிக்ருண்ணந்து மேக்ராஸம் காவ: திரைலோக்யமாதா: II

என்ற சுலோகத்தைக் கூறிப் புல்லைக் கொடுக்கவேண்டும்.

எல்லோருக்கும் ஹிதமானவைகளாயும்; எல்லாப் பாபத்தையும் போக்குபவைகளாயும், மூன்று லோகத்திற்கும் தாய்போன்றவைகளாயுமிருக்கிற ஏ பசுக்களே! 'என்னுடைய இந்த ஒரு பிடி புல்லை ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்பது அதன் பொருள். மேலும், "யாவர்க்குமாம் பசுவுக்கு ஒருவாயுறை" என்று திருமூலரும் பசுவைப் பூஜித்தலைப்பற்றிக் கூறுகிருர். இதற்கு கவாஹ்நிகம் என்று பெயர்.

மிகப் பழையகாலமாகிய சங்க காலத்தில் பசுவளமில்லாத வீடுகளே நம் நாட்டில் இல்லை. மிக வறுமையிலுள்ளவர்கள் கூடப் பல பசுக்களை உடையவர்களாக இருந்தனர் என்று தெரிகிறது. ஒருபசு மட்டுமே உள்ள வீட்டினரின் வாழ்க்கை சிறப்பில்லாத வாழ்க்கை என்று சங்கநூலாகிய குறுந்தொகையில் வரும் "ஓரான்வல்சிச் சீரில் வாழ்க்கை" என்ற தொடர் விளக்குகிறது. பாகவதம் என்ற நூல் பசுக்களைப் பற்றி மிகுதியாகப் பேசுகிறது. தைப் பொங்கலன்று கதிரவனை வணங்கி மறுநாள் பசுக்களை வணங்குவது நமது மரபு.

## ஆகமத்தில் பசுக்கள்

வேதங்கள் இறைவனைப் பற்றியும் அறங்களைப் பற்றியும் கூறுகின்றன. ஆகமங்கள் இறைவனை அடைவதற்குரிய செயல் முறைகளை விளக்குகின்றன. அவற்றுள் வீராகமத்தில்,

நந்தா பத்திரா, ஸுரபி, ஸுசீலா, ஸுமனுஸ்ததா,
பஞ்சகாவ: ஸமுத்பந்நா: லோகாநுக்ரஹகாம்யயா,

நந்தை முதலிய ஐந்து வகையான பசுக்கள் லோக அநுக்ரஹத்தின் பொருட்டு ஸிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன என்று கூறப்படுகிறது. மேலும் நிப்தாகமத்தில்,

"தேவாநாம் யஜநார்தாய ஸர்வலோக ஹிதாயச
காவோமா தாஸ்ம்ருதா பூமௌ ஸ்நாநார்தந்து சிவாஜ்ஞயா
கோஷுதேவா, சிவா நித்யம் கோபிர்யஜ்ஞ ப்ரவர்த்தே"

இதன் பொருள்: 'லோக ஹிதத்திற்காகவும் தேவ யாகத்திற்காகவும் சிவனுக்கு அபிஷேகத்திற்காவும் சிருட்டிக்கப்பெற்றுப் பூமியில் தாயாகவும் தம்மிடத்தில் தேவர்கள் எப்பொழுதும் இருப்பதாகவும் உள்ள பசுக்களால் யாகங்கள் நடக்கின்றன' என்றும் நினைக்கப்படுகிறது. இதனால் அதன் ஸ்ருஷ்டியின் பயன் நன்கு விளங்குகிறது.

## பூஜை முறை

அகோர சிவாசாரியார் இயற்றிய பரார்த்த நித்ய பூஜா விதி என்கிற பத்ததியில் ஆலயத்தில் கோ பூஜை முறையும், காலமும், இடமும், அதன் பயனும் கூறப்பட்டுள்ளன. நல்ல லக்ஷணமான கன்றுள்ள பசுவை, கால ஸந்தியில் அம்மன் பூஜை முடிந்த பிறகு குளிப்பாட்டி நன்ருக அலங்கரித்து வாத்திய கோஷங்களோடுகூட ஸ்வாமி ஸந்நிதியில் எதிர்முகமாக நிறுத்தி அதன் இடதுபுறத்தில் ஆசார்யர் வடக்கு முகமாக நின்று கொண்டு ஸங்கல்பம் செய்துகொண்டு, அர்க்ய ஜலத்தால் அஸ்திர மந்திரத்தால் ப்ரோக்ஷித்து, முகம், பின்புறம் வயிறுகளில் ப்ரும்ம விஷ்ணு ருத்திர சக்திகளைப் பூஜித்து பொதுவாகத் தலைமுதல் பாதம் வரையில் பஞ்சப்ரும்மஷடங்க மந்திரங்களால் அர்ச்சித்து நந்தா, பத்திரா, ஸுரபி, ஸுமனு, ஸுரமுகி ஸுராக்ரஜா, தேனு, கபிலா என்ற பெயர்களால் நமோந்தமாகப் பூஜித்து, நான்கு பாதங்களில் நான்கு வேதங்களை அர்ச்சித்து, கீழ்வரும் சுலோகத்தைச் சொல்லி த்யானம் செய்ய வேண்டும்.

"கோ ரூபம் மாதிருகா சக்தி ச்ருங்காக்ரே ஸர் வதேவதா,
முகந்து சந்திதைவத்யம் ப்ருஷ்டேகங்காஸரஸ்வதீ
பாதேஷு தர்மதேவாம்ச ஸ்கந்தோதரே அக்நிஸூர்யகௌ
புச்சாக்ரேஸர்வதீர்த்தாநி ரோமமூலேருஷிச்வரா:
இத்யேவம் தேவதாரூபம் கோதேவி த்வாம் நமாம்யஹம்,"

என்று சொல்லி ஆவாஹநம் செய்ய வேண்டும். இதன்பொருள் : 'ஸகல தேவதாரூபமாகவும், கொம்பு நுனியில் ஸகல தேவதைகளும், முகத்தில் சந்திரனும், பின்புறத்தில் கங்காஸரஸ்வதியும், பாதங்களில் தர்மதேவதையும், தோள் வயிற்றில் அக்நிஸூர்யர்களும், வால் நுனியில் ஸகலதீர்த்தங்களும், ரோம மூலத்தில் எல்லாருஷிகளும் இருக்கிறார்கள். இவ்வாறு தேவதாஸ்வரூபமாக இருக்கிற கோதேவியே! உன்னை நமஸ்கரிக்கிறேன்.' என்றுகூறி ஆவாஹநாதிகளைச் செய்து பூஜித்து நைவேத்ய தூபதீபங்கள் கொடுத்து அன்னம் அபூபம் (வடை) தேங்காய் பழங்கள் அறுகம்புல் இவைகளை நிவேதனம் செய்து அர்க்யம் கொடுத்து ஆலயப்பரதக்ஷிணமாக அழைத்துச் சென்று கொட்டிலில் கட்டிவிடவேண்டும்.

## பயன்

'திலீபன்' என்ற சூரிய குலத்தரசன் நந்தினி என்ற பசுவை வழிபட்டுத் தான் விரும்பிய புத்திர ஸந்தானத்தை அடைந்ததாக காளிதாஸன் இரகுவம்சம் என்ற காவ்யத்தில் கூறுகிறான். மேலும் பசுவினிடத்திலிருந்து உண்டாகும் பால் முதலிய பஞ்சகவ்யம் மனிதனின் பாவத்தை நீக்குகின்றது; அதனிடமிருந்து உண்டாகும் ஒப்புயர்வற்ற கோரோசனை என்பது பால் தயிர் போல் இறைவனுக்கு உகந்த பொருள்களில் ஒன்றாக விளங்குகிறது.

இத்தகைய சிறப்புக்குக் காரணமாகிய பசுக்களை "வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள், நீங்காதே செல்வம் நிறைந்தேலோரெம்பாவாய்" என்று திருப்பாவை கூறுகிறது.

இவ்வாறு வேதங்களிலும் ஆகமங்களிலும் புராணங்களிலும் போற்றப்படுகின்ற பசுக்களை நாமும் ஆலயங்களிலும் வீடுகளிலும் போற்றி வழிபட்டு விரும்பிய பயன்களை அடைவோமாக.

---

## நல்ல மனைவி !

"அன்பு செய்வதில் தாய்போலவும், தொண்டு செய்வதில் வேலைக்காரி போலவும், அழகில் திருமகளைப் போலவும், பொறுமையில் நிலமகளைப் போலவும், போகத்தில் தாசி போலவும், ஆலோசனைகள் சொல்வதில் அமைச்சன் போலவும், இருப்பவளே நல்ல மனைவி"

— நீதி வெண்பா.

## அடியால் அளக்கலாமா ?

தெய்வத் திருவுருவங்களேயோ இராஜகோபுரம் கர்ப்பக்கிரக விமானம் போன்ற ஆலயப் பகுதிகளேயோ இக்காலத்தில் அடி யளவில் குறித்து வழங்கிவருகின்றனர். அடி என்ற அளவினுல் தெய்வத் தொடர்புடைய பொருள்களே அளந்து கூறுதல் பொருந்துமா என்பது ஆராயத்தக்கது. இராஜராஜசோழன் காலத்தில் கோயில் திருவுருவங்களே 'முழம்' என்ற அளவை யால் கணக்கிடுதலேக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. முழ அளவின் கீழ்க்கணக்கைப் பின்வருமாறு கொள்ளவேண்டும்.

| | | |
|---|---|---|
| 8 தோரை (நெல்) கிடைக்கை | முறையில் | 1 விரல் |
| 12 விரல் | ;, | 1 சாண் |
| 2 சாண் | — | 1 முழம் |

உதாரணம் :— 'பாதாதிகேசாந்தம் பதினேழு விரலே இரண்டுதோரை உயரமும் இரண்டு திருக்கையும் உடையராகக் கனமாக எழுந்தருளுவித்த நம்பி ஆரூரனுர் பிரதிமம்'.

'பாதாதிகேசாந்தம் ஒரு முழமே நால்விரலரை உயரத்து இரண்டு திருக்கை உடையராகக் கனமாக எழுந்தருளுவித்த பெரிய பெருமாள்' (இராஜராஜசோழன்) என்பனபோன்ற கல்வெட்டுத் தொடர்களால் இதனே நாம் அறியலாம்.

## அதிசய கடிகாரம்

குஜராத் மாநிலத்தில் ராஜ்கோட் மாவட்டத்தில் ஜஸ்தான் துவக்கப் பள்ளிக்கூடத்திலுள்ள ஒரு ஆசிரியர் இருபத்தேழு உலக நாடுகளின் நேரத்தையும், இந்திய நேரத்தையும் ஒரே சமயத்தில் காட்டக்கூடிய டிரான்ஸ்ஸிஸ்டர் கடிகாரமொன்றைத் தயாரித்திருக்கிருர்.

இந்தக் கடிகாரம் தேதி கிழமை ஆகியவற்றையும் காட்டும். மூன்று பாட்டரிகளில் இது ஓடுகிறது. இந்தக் கடிகாரத்தில் ஒரு மின்விளக்கு இரவில் தாகை எறியத்துவங்கி காலேயில் அணேந்துவிடும். இது மணிக்கு ஒருதடவை மணி அடிக்கும்'

நம் நாட்டில் இத்தகையதொரு கடிகாரம் தயாரிக்கப்படுவது இதுவே முதல் தடவை,

— தமிழ்நாடு, மலர் 2. இதழ் 46. 5–12–72.

# மூதறிஞர் இராஜாஜி அவர்கள் மறைவு

அரசியல் துறையிலும், ஆன்மீகத் துறையிலும் தலைசிறந்தவராய் உலகம் போற்ற வாழ்ந்தவர் சக்ரவர்த்தி இராஜகோபாலாசாரியார். மதிநுட்பம் நூலோடு உடையவராய் விளங்கிய இவரது அறிவுரைகள் அவ்வப்போது நாட்டின் முன்னேற்றத்திற்கு நல்லுதவி புரிந்தன. இந்திய விடுதலைப் போரில் அவர் ஆற்றியுள்ள அரும்பணிகள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கவை. சமய இலக்கியத்துறையில் அவர் எழுதிய, சக்ரவர்த்தித் திருமகன், வியாசர் விருந்து, உபநிடதக் கதைகள் போன்ற நூல்கள் பலரும் போற்றும் இலக்கியப் படைப்புக்கள். 94 ஆண்டுகள் நிறைவாழ்வு வாழ்ந்து 25—12—72 அன்று மறைந்த இராஜாஜி அவர்களின் நினைவு இந்திய மக்களின் நெஞ்சங்களில் எந்நாளும் நிறைந்திருக்கும்.

இராஜாஜி அவர்கள் நமது தருமையாதீனத் திருமடத்தின் சமய வளர்ச்சிப் பணிகளிலும் கல்வி வளர்ச்சிப் பணிகளிலும் ஆக்கமும் ஊக்கமும் உடையவராய் விளங்கினர். தருமையாதீனம் சென்னை சமயப் பிரசார நிலையமும், தருமையாதீனம் திருநெறிய தெய்வத்தமிழ் மன்றமும் இராஜாஜி அவர்களால் திறந்து வைக்கப் பெற்றவை.

சென்னை சமயப் பிரசார நிலையத் திறப்பு விழாவின்போது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் முன்னிலையில் இராஜாஜி அவர்கள் ஆற்றிய திறப்புரையில் சிலபகுதிகளையும், இராஜாஜி அவர்களைப்பற்றி ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளிய ஆசியுரையில் சில பகுதிகளையும், இவ்விதழில் இராஜாஜி அவர்களை நினைவு கூரும் வகையில் வெளியிடுகின்றேம்.

இந்திய நாட்டின் ஏற்றமிகு தலைவராய் விளங்கிய இராஜாஜி அவர்களின் ஆன்மா இறையடி நீழலில் இன்புற்றிருக்கப்பிரார்த்திக்கிறேம்.

— ஆசிரியர்.

## இராஜாஜி அவர்களைப் பற்றி
## ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்

இராஜாஜி அறிவு, அன்பு, அடக்கம், அஞ்சாமை, உறுதி, உள்ளத் தூய்மை முதலிய எல்லா நற்குணங்களுக்கும் உறைவிடமான

உத்தமர்; தமிழ்நாட்டின் தலைநகரைத் தமிழ் மக்கட்கு வாங்கிக் கொடுத்த ஒரு தமிழ்ப் பெரியார் இராஜாஜி.

* * * *

நமது இராஜாஜி அவர்கள் மிகுந்த உறுதிப்பாடுடையவர். அரசியல் பீடத்திலிருந்துகொண்டே – முதலமைச்சராயிருந்து கொண்டே, "இறைவன் திருவருள் இருந்தாலல்லது ஒன்றும் நடக்காது; ஒன்றும் சிறக்காது; ஒன்றும் பயன் தராது. ஆதலால் அவன் திருவருளைப் பெறுவதற்கு வழிபாடு ஒன்றுதான் நாம் செய்யும் வேலை. வழிபாடு என்றால் கை குவித்தல், கீழே விழுந்து வணங்குதல் அவ்வளவே என எண்ணுதீர்கள். மனம் பக்தியில் ஈடுபட்டு அவைகளைச் செய்யவேண்டும். பக்தி ஒன்றுல்தான் இறைவனைக் கட்டுப்படுத்தலாம்" என்று உறுதியோடு சொன்னவர்.

* * * *

எடுத்த இடங்களிலெல்லாம் இறைவன் கருணையும் பக்தி மார்க்கமும் இல்லாத பேச்சே இவரிடம் இல்லை. இவரால்தான் இன்றைக்குப் பக்திமார்க்கம் நாட்டில் பரவி வருகின்றது. அதனுல் இவர் வெறும் அமைச்சரல்ல. ஆண்டவனுக்குப் பணி செய்யுங்கள்; அவனுக்குச் செய்யுந் தொண்டுகள் யாவும் மக்களை மகிழ்விக்கும் வழி என்பது இவரது உறுதி.

* * * *

காங்கிரசும் தெய்வ நம்பிக்கை என்ற ஆணிவேரில் இன்றைய மக்களுடைய தியாகம், தொண்டு, அன்பு, ஆதரவு என்ற பக்க வேர்களால் பலப்பட்டு நிற்கிறது. தென்னுட்டில் இந்த காங்கிரஸ் மாமரத்தின் பெரிய காவலாளியாக இருப்பவர் நம் இராஜாஜி

* * * *

சென்னை அரசாங்க முதலமைச்சராயிருந்தபோது

## சக்ரவர்த்தி ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியார் அவர்கள்

சென்னை, சமயப் பிரசார நிலையத்தைத் திறந்துவைத்து

28—9—53 இல் ஆற்றிய உரையின் ஒருபகுதி

**ஸ்தானத்திற்கு ஏற்ப நடக்கவேண்டும்:**

மடங்கள் பற்றி எனக்கு அனுபவம் குறைவு. மடங்களுக்குப் போகவேண்டிய சமயம் வரும்போது எப்படியாவது தப்பித்துக் கொண்டிருக்கிறேன் நான். அம்மாதிரி ஒரு இடத்திற்குப்

போனால், அந்த ஸ்தானத்திற்கேற்ப நடக்கவேண்டும். எனக்கு அளிக்கப்பட்ட பயிற்சியோ அதற்குத் தகுந்தவாறு இல்லை. என் தோற்றம் மனதிற்கு வெறுப்புண்டாக்கும் தோற்றம். ஆகவே மடங்களுக்குப் போக எனக்குக் கூச்சம் ஏற்படுகிறது. நான் வைதிக குடும்பத்தில் பிறந்தவன்தான். ஆனால் இந்தக் காலத்திற்கேற்ப எனக்குப் பெரியவர்கள் பயிற்சி அளித்து விட்டார்கள். அதனால் வைதிகமுறை தவறிப்போய்விட்டது. தவறிப்போன முறையைப் புதிதாக ஆரம்பித்தால் அதை வேஷம் என்று சொல்வார்கள். ஆகவே, என்பாட்டுக்கு வாழ்க்கையை நடத்திப்போகிறவன் நான்.

## மௌனம் ஏன்?

எதற்காக என்னைப் புகழ்கிறார்கள். என்னைப்போல இத் துறையில் ஈடுபட்டிருந்தவர்கள் சொல்லாமல் மௌனமாக இருந்த விஷயத்தை நான் தைரியமாகச் சொன்னேன். தர்மம், கடவுள்பற்றிப் பேசக்கூடாதென்று மௌனயோகம் மேற் கொண்டிருந்தபோது, நான் அதுபற்றி மௌனம் ஏன் என்று பேசினேன். அதுபற்றிப்பேச எல்லோருக்கும் ஆசை. ஆனால் அந்த ஆசையை அவர்கள் அடக்கிவைத்துக் கொண்டிருந்தார் கள். ஆசையை அடக்குவது கஷ்டமானதே. கட்டுப்பாட்டை மீறினேன். இதரர் பேசாமலிருந்ததை நான் பேசியதால் மக்களுக்குச் சந்தோஷம், ஆதலால் என்னைப் புகழ்கிறார்கள்.

## தலைசீர்பட்டால் உடலும் சீர்படும்:

தருமபுர ஆதீனத்தவர்கள் தங்கள் சேவையைத் தமிழ் நாட்டின் தலைநகராகிய சென்னைப் பட்டினத்திற்கே கொண்டு வந்திருக்கிறார்கள் என்கிறார்கள். இது தலைநகரந்தான். தலை என்றால் பேன் சேரும்; அழுக்கு சேரும். அவற்றை ஒழிக்க ஏற்பாடு செய்கிறார்கள். இது சரியே. கெட்டுப்போன ஊரைச் சீர்படுத்தத்தான் தருமபுர ஆதீனத்தவர்கள் இம்முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். தலை சீர்பட்டால் உடலும் சீர்படும். உடல் முழுவதும் சரிப்படுமென்று நம்பிக்கை. தலைநகரில் செய்யப்படுவதால் தமிழ்நாடு முழுவதும் பயனடையும். தலை நகருக்கு வருவதால் ஆதீனம் பிரகாசிக்கும் என்று அவர்கள் இங்கு வரவில்லை. ஆதீனத் தலைநகரம் தருமபுரம்தான். ஆனாலும் தலையைச் சீர்படுத்த இங்கு இந்த நிலையத்தை ஆரம் பித்திருக்கிறார்கள்.

## சந்தேகம் இல்லை:

தருமபுர ஆதீனத்தின் வேலைபற்றிப் புகழ்ந்து பேசப் பட்டது. அவர்கள் நல்ல சேவைசெய்து வருகிறார்கள், இது பற்றிச் சந்தேகமே இல்லை. முந்தைய காலத்தில் அந்தந்த காலத்திற்கேற்ப குறிப்பிட்ட வேலையைச் செய்ய மடங்கள் ஏற்பட்டு வேலையைச் செய்துவந்தன; உயிர் வேலைசெய்து கொண்டிருப்பதுதான் இயற்கைநியதி. வேலைசெய்யாமற்போனால் உயிர் குன்றி மறைந்துவிடும். ஆலயங்களில் பூஜை நடக்கா விடில் அது குட்டிச்சுவராகிவிடும். பின்னர் அந்நிய நாட்டார் ஸ்தம்பம் முதலியனவற்றைச் சிற்பம் கலை இவைகளுக்காகப் பார்ப்பார்கள். சிற்பத்தினை எடுத்துக் காட்டுவதாக அது இருக்கும். பின்னர் முடிவில் அது மறைந்துவிடும்; தருமபுர ஆதீனம் வேலை செய்கிறது.

ஆதீனத்தார் சாமர்த்தியமாக - தைரியமாக ஏற்பாடுகளை ஆரம்பித்திருக்கிறார்கள். சென்னைப் பட்டினத்தில் இது முக்கிய மான நிகழ்ச்சி. இதைத் திருவிழாவாகக் கொண்டாடுவது சரியே. எவ்வளவு விரைவில் சிறப்பாகக் கட்டிடத்திற்கு ஏற் பாடு செய்திருக்கிறார்கள். இந்த இடத்தை இப்படி அலங்கரித் திருக்கிறார்கள்.

## பக்தியோடு நிற்கும்போது சர்ச்சை ஏது?

இந்த விழாவிற்குச் சங்கராச்சாரியார் வாழ்த்து அனுப்பி யிருக்கிறார்கள். மடங்கள் எல்லாம் பக்தியை உண்டாக்குவனவே. பொதுவாக இதில் வித்தியாசமில்லை. அதை விட்டு அதற்கு மேலாக ஞானமார்க்கம் என்று போகும்போதுதான் அபிப்பிராய பேதங்கள் எழுகின்றன. இந்த வழி நல்லதா? அந்தவழி நல்லதா? என்ற சர்ச்சை எழுந்துவிடுகிறது. பக்தியோடு நிற்கும்போது சர்ச்சை இல்லை. அதற்கு மேலேபோய் அறியக் கூடாததை அறியவேண்டுமென்கிற துராசை ஏற்படும்போது ஆண்டவன் ஒரு சவுக்கடி போடுகிறார். சர்ச்சை கிளம்பி பேதங் கள் ஏற்பட்டவுடன் மடங்களில் சண்டை ஏற்பட்டுப் போகிறது. எல்லாத்தர்மங்களும் எல்லாச் சமயங்களும் ஒன்றுக்கே வழி காட்டுவன என்பதுதான் உண்மை; அதை மறந்து ஞான மார்க்கத்தில் அத்வைதமா? த்வைதமா? விசிஷ்டாத்வைதமா? என்ற சர்ச்சை எழுந்துவிடுகிறது. சைவம், வைஷ்ணவம் என்றால் நமக்குப்புரிகிறது. அத்வைதம் த்வைதம் புரியாதது.

இப்படிச் சர்ச்சை எழும்போது இதற்கு மருந்துதரக் கடவுளே ஏற்பாடு செய்கிறார். கடவுளே இல்லையென்று ஒரு சிலரைச் சொல்லக் கிளப்பி ஏற்பாடு செய்கிறார். கடவுளை அறியும் வழிக்காக சண்டைபோட்டுக் கஷ்டப்பட்டோம். இப்போது கடவுளே இல்லை என்கிறார்களே சிலர் என்று எல்லோருக்கும் திகில் ஏற்பட்டுவிடுகிறது. கிறிஸ்தவர்கள் முஸ்லீம்கள் எல்லோருக்கும் கிலி ஏற்படுகிறது; இது கடவுள் ஏற்பாடுதான். ஏனெனில் அவனன்றி எதுவும் நடக்காது. வித்யாச பாவனைகளை மறந்துவிட்டு மொத்தமாக எல்லோரும் ஒன்று சேருகிறார்கள். இது ஆண்டவனின் லீலை. இங்கு இஸ்லாமியர்களுக்கு இடமில்லை. கிறிஸ்தவர்களுக்கும் இடமில்லை என்பதில்லை. ஓல்லோரும் ஒரே வேலையை-சமய வேலையைத்தான் செய்கிறார்கள். சங்கராச்சாரியார் மடத்துக்கும் தருமபுர மடத்திற்கும் வித்தியாசமுண்டு. இருவரும் சிவன் கோயிலுக்குப் போகிறார்கள் என்றாலும் மூலக்கொள்கை மாறுபட்டது. இன்று பொதுவாகச் சமயப்பணி என்ற முறையில் ஒன்று சேர்கிறார்கள். சங்கராச்சாரியார் மடத்திலிருந்து வாழ்த்துச்செய்தி வந்திருக்கிறது.

இந்த நிலையம் பக்திமார்க்கத்திற்காக ஏற்பட்டுள்ள நிலையம். அறியக்கூடாத பொருளை அறியும் வீண் முயற்சி இல்லை இது.

## கடின பாஷையில் கருத்து உண்டு :

ஒரு விஷயத்தைக் கஷ்டப்பட்டுத் தெரிந்து கொண்டால் தான் திருப்தி ஏற்படுகிறது. அதற்காகத்தான் கடினமான பாஷைபோட்டுப் புத்தகங்களை எழுதுகின்றார்கள். அதைப் படித்துக் கஷ்டப்பட்டுப் புரிந்துகொண்டால் நமக்கும் தெரிந்ததே எனத் திருப்தி ஏற்படுகிறது.

## விலைகொடுத்து வாங்குங்கள் :

ஆதீனத்தில் புத்தகங்கட்கு விலை சரசமாகப் போட்டிருக்கிறார்கள். விலை ஏன்? பெயரே தருமபுர ஆதீனமாயிற்றே, தருமமாக விநியோகிக்கக்கூடாதா என்று கேட்கலாம். விலை இல்லையென்றால் ஒருசில பிரதிகளே அச்சிட்டு விநியோகிக்க முடியும். ருசியான மாம்பழத்தைத் தின்கிறோம். கொட்டையைத் தூக்கி எறிந்துவிட்டால் மறுபடி பழந்தின்ன முடியுமா? எங்காவது போட்டு வைத்திருந்தால் முளைத்திருக்கும். காலாந்தரத்தில் பழம் கொடுக்கும்; தின்னலாம். அதுபோல விலை கொடுத்தால் கிடைப்பதைக் கொண்டு மேலும் அவர்கள் பிரதிகள் அச்சிட்டு இதரருக்கும் தரமுடியும். ஆகவே, விலை கொடுத்து வாங்குவதைத் தருமமாகக் கொள்ளலாம்.

## ஆண்டவன் குணம் எட்டு

"கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான் - தாளை வணங்காத் தலை" என்னும் திருக்குறள் முதலியவற்றில் 'இறைவனுக்கு உள்ள அருட்குணங்கள் எட்டு' என்று கூறப்படுகிறது. அவை பின்வருவன :-

1. தன் வயத்த னாதல் – பிறர் வழிப்படாத சுதந்திரத்துவம்.

2. தூய உடம்பின னாதல் – ஊன் வடிவாகிய மாயா சரீரம் இல்லாது, தூய அருள் திருமேனி உடைமை.

3. இயற்கை உணர்வினனாதல் – பிறர் அறிவிக்க வேண்டாது தானே அறிதல்.

4. முற்றும் உணர்தல் – எல்லாவற்றையும் எப்பொழுதும் அறிந்து நிற்றல்.

5; இயல்பாகவே பாசங்களின் நீங்குதல் – இயல்பாகவே பாசத்தால் பற்றப்படாது விளங்குதல்.

6. முடிவில் ஆற்றல் உடைமை – எல்லாவற்றையும் இளைப்பின்றிச் செய்யும் வல்லமை யுடைமை.

7. பேரருள் உடைமை – எல்லா உயிர்களிடத்தும் என்ஞான்றும் மாறாத கருணை உடைமை.

8. வரம்பில் இன்பம் உடைமை – எல்லை யில்லாத (துன்பம் வந்து குறுக்கிடாத – நிலைத்த) இன்பம் உடைமை.

## ஆணவத்தின் குணமும் எட்டு

ஆணவத்திற்கும் எட்டுக் குணம் என்று 'இருபா இருபஃது' என்னும் நூலில் சொல்லப்பட்டுள்ளன. அவை பின்வருவன :—

1. விகற்பம் – மற்றவர்களினின்றும் தன்னை வேறுபடுத்தித் தனக்கே நன்மை தேடுதல்.

2. கற்பம் – தனக்கு நன்மை தருவது என்று ஒன்றைத் தானே கருதிக்கொள்ளுதல்.

3. குரோதம் – தன் கருத்துக்கு மாறாய் உள்ளவர்களிடம் சினம் கொள்ளுதல்.

4. மோகம் – இழிந்ததை விரும்புதல்.

5. கொலை – தன்னலத்தின் பொருட்டுப் பிற உயிரைக் கொல்லுதல்.

6. அஞர் – துன்பத்தில் அழுந்தித் துயர் உறுதல்.

7. மதம் – யான் எனது என்னும் செருக்கு.

8. நகை – சிறியதைப் பெற்று மகிழ்தல்.

ஆண்டவன் ஒளி; ஆணவம் இருள். ஒளிக்கும் எட்டுக் குணம், இருளுக்கும் எட்டுக் குணம் என்பது வியப்பாக உள்ள தல்லவா. ஒளிக்கும் இருளுக்கும் நடைபெறும் போராட்டமே இவ்வுலக இயக்கம். எப்படியும் ஒளி இருளை வென்று விளங்குவதே முடிவானது.

# செய்திகள்

### தருமையாதீனத்தில்

## ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவசர் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜைவிழா 22—12—72 வெள்ளிக்கிழமையன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் காலை மாலை இருவேளைகளிலும் எழுந்தருளி வழிபாடு நிகழ்த்தி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி ஆசியருளினர்கள். குருபூஜை விழா மலராக "பிரம்ம சூத்திரம்" என்ற நூல் தமிழ் ஆங்கில மொழிப் பெயர்ப்புடன் வெளியிடப் பெற்றது. குருபூஜை விழாவையொட்டி வழிபாட்டிற்குப் பின்னர் காலை மாலை இருவேளைகளிலும் பிரம்ம சூத்திரம் பற்றிய சொற்பொழிவுகள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் முன்னிலையில் நிகழ்ந்தன.

காலையில், வித்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரைக்குப் பின்னர், திருச்சிற்றம்பலம் திரு. மு. அருணசலம் அவர்கள் பிரம்மசூத்திரச் சிறப்புப் பற்றியும், தருமையாதீனப்புலவர், மகாவித்துவான். திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் "சிகண்டபாடியச்சிறப்பு" பற்றியும், சொற்பொழிவாற்றினர்கள். மாலையில் சிவாகம வித்துவான். சிவஸ்ரீ. சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள் பிரமசூத்திரமும் உபநிடதங்களும் என்ற தலைப்பிலும், தருமையாதீனப்புலவர், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் பிரமசூத்திரமும் தமிழ் நூல்களும் என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர்கள்.

## திருவெம்பாவை வகுப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீன மடாலயத்தில் பண்டாரக்கட்டில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளக் குறிப்பின்வண்ணம் இவ்வாண்டு மார்கழி மாதத்தில் நாள் தோறும் மாலை 7 மணி முதல் திருவெம்பாவை வகுப்பு நடைபெற்றது. தருமையாதீனப்புலவர், மகாவித்துவான். திரு.

சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களுக்கு விளக்கவுரை செய்தார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சில முக்கியமான பாடல்களுக்கு விளக்கம்செய்து அருளுரை வழங்கினர்கள். அன்பர்கள் பலரும் வகுப்பில் கலந்துகொண்டு விளக்கவுரை அருளுரைகளைக் கேட்டுப் பயன் பெற்றனர்.

## திருவெம்பாவைச் சொற்பொழிவுகள்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களில் ஆண்டுதோறும் நடைபெறுவது போல் இவ்யாண்டும் திருவெம்பாவைச் சொற்பொழிவுகள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளக்குறிப்பின்படி, நடைபெற்றன.

மணக்குடி ஸ்ரீ சுந்தரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 29—12—72 அன்றும், கருங்குயில்நாதன்பேட்டை ஸ்ரீ சக்திபுரிசுவரசுவாமி தேவஸ்தானத்திலும், விளநகர் ஸ்ரீ துறைகாட்டும் வள்ளலார் சுவாமி தேவஸ்தானத்திலும் 30—12—72 அன்றும், திருமுல்லைவாயில் ஸ்ரீ முல்லைவனநாத சுவாமி தேவஸ்தானத்தில் 31—12—72 அன்றும், பேரளம் ஸ்ரீ சுயம்புநாத சுவாமி தேவஸ்தானத்தில் 1—1—73 அன்றும், குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானத்திலும், மாயூரம் - குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்திலும் 2—1—73 அன்றும், குறுக்கை ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 3—1—73 அன்றும், ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத் தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் 6—1—73 அன்றும், தலைஞாயிறு ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 9—1—73 அன்றும் திரும்பாவைச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி முதல்வர், பேராசிரியர்களும், மன்னன்பந்தல் அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளித் தமிழாசிரியர் ஆகியோர் திருப்பள்ளியெழுச்சி, மார்கழி நீராடல், பாவை நோன்பு, மாணிக்கவாசகர், மார்கழிச் சிறப்பு, இரு பாவைகள், திருவெம்பாவை, பாவையும் கோவையும், திருவாசகத்தேன், திருவெம்பாவையில் ஐந்தொழிற் சிறப்பு, ஆகிய தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர்.

ஆங்காங்கும் அன்பர்கள் பலர் வந்து சொற்பொழிவுகளைக் கேட்டு திருவெம்பாவைப் பொருளை உணர்ந்து மகிழ்ந்தனர்.

அட்டைப் பட விளக்கம்:

# கோ பூஜை

பசுக்கள் தெய்வத் தன்மை வாய்ந்தவை. பசுக்களின் உறுப்புக்களில் தேவர் பலரும் தங்கி யிருப்பர்.

இரு கொம்புகளின் அடியில் பிரம விட்டுணுக்கள், அவற்றின் நுனியில் புண்ணிய தீர்த்தங்கள், தலையில் சிவபெருமான், நெற்றியில் உமை யம்மை, நாசியின்மேல் முருகன், நாசித் துளையில் அசுவினி தேவர், கண்களில் சூரிய சந்திரர், பல்லில் திசைக் காவல் வாயு, நாவில் வருணன், உங்காரத்தில் கலைமகள், இருதயத்தில் இயமன், தாடைகளில் இயக்கர், உதட்டில் சந்தியா தேவதைகள், கழுத்தில் இந்திரன், திமிலில் பன்னிரு சூரியர், மார்பில் சாத்தன் தேவியர், கால்களில் பல வாயுக்கள், முழங்கால்களில் மருத்துவர், குளம்பின் நுனியில் நாகர், குளம்பின் நடுவில் கந்தருவர், குளம்பின்மேல் தேவ மாதர்கள், முதுகில் உருத்திரர், முடக்குக்களில் வசுக்கள், பின் தட்டுக்களில் பிதிரர், கருவாயில் சத்த மாதர்கள், எரு வாயில் திருமகள், வாலின் அடியில் நாகராசன், வால் முனையில் சூரிய ஒளி, சிறுநீரில் கங்கை, சாணத்தில் யமுனை, உரோமங்களில் முனிவர்கள், வயிற்றில் நிலமகள் என்று இவ்வாறு இருப்பர். மடியில் கடல், வயிறு இருதயம் முகம் இவை மூன்றிலும் முத்தீக்கள், எலும்புகளில் பல்வகை வேள்விகள் இருக்கும். இவ்வாறு சிவதருமோத்தரத்துள் சொல்லப்படுகின்றது.

இத்தகைய பசுக்களுக்கு மடம் அமைக்கும் முறை, பாது காக்கும் முறை, பூஜிக்கும் முறை முதலியன சிவாகமங்களில் கூறப்படுகின்றன. சிவபூஜை செய்வோர் நாள்தோறும் கபில பூஜை செய்தல் வேண்டும் என்பது விதி.

தருமையாதீனம் 25ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள், ஆதீனத்திலும், ஆதீனத் திருக்கோயில்களிலும் கோ பூஜை, கஜ பூஜைகள் முறையாக நிகழ ஏற்பாடுகள் செய்து நடத்திவந்தார்கள். ஆதீனத்தில் அவர்கள் நாள் தோறும் கோ பூஜை செய்தருளியதில் ஒருநாள் நிகழ்ச்சியே இவ் விதழின் அட்டைப் படத்தை அலங்கரிக்கின்றது. பொங்கற் பெருநாளில் மாட்டுப் பொங்கல் நன்னாளை முன்னிட்டு இது வெளியிடப் பெறுகின்றது,

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

## திரு. K. முத்துஜோதிடர்

( பரிதாபிஞு தைமீ 1உ முதல் 29உ முடிய )

( 14—1—73 முதல் 11—1—73 முடிய )

பரிதாபிஞு மார்கழிமீ 30உ இரவு உதையாதி நாழிகை 47-50 விஞடிக்கு பரணிநக்ஷத்திரமும், துலாலக்கினமும் கூடிய சுபவேளையில் ஸ்ரீ லோகரக்ஷகரான சூரியபகவான் உத்தராயண மகரசங்கராந்தி புண்ணிய காலத்தைப் பானுவாரத்திலேயே பிரஜைகளுக்கு அளித்து உலகைக் காப்பாற்ற பிரவேசம் செய்கிருர், பிரவேசகாலபலன் பூர்ணசுபம். உலகெங்கும் சுபிக்ஷமும் தனதான்ய விருத்தியும் ஆரோக்கியமும் தெய்வசக்தி ஓங்குதலும், சாது ஜனங்கள் பக்த ஜனங்கள் அஞதைகள் பரம ஏழைகள் எல்லோருக்கும் சௌக்கியமும் விலைவாசி குறைதலும், ஆஸ்தீகம் விருத்தி அடைதலும் ஏற்படும். கடவுள் காப்பார், புண்ணியபூமிகள் நன்கு பிரகாசிக்கும்.

குறிப்பு :- மேற்படி மாதத்தில் உத்தராயண பிரவேச காலத்தில் ராஜா மந்திரியான குருபகவான் மேற்குத் திக்கில் அஸ்தமனத்தையும் ராசி அந்தத்தில் தான்யாதிபதி சுக்கிரனேடு சேர்ந்தும், ராகுவோடு சேர்ந்தும், அதேசமயத்தில் சனிபகவான் அஷ்டமராசியில் வக்ரத்திலும் ஷஷ்டாஷ்டகத்திலும் அமைந்தபடியால் நமது பாரதபூமியில் வடக்கு வடமேற்கு பிரதேசங்களிலும், விந்தியோத்தரம், ஹிமாலயம், கங்காதீரம் முதலிய இடங்களிலும் அன்னிய நாடுகளில் வடமேற்குப் பிரதேசங்களிலும் அனேகவிதமான உற்பாதங்களும், பிரஜைகளுக்குப் பயமும் தரும், புண்ணியபூமிகள் சௌக்கியத்தை அடையும். சகலமான பிரஜைகளையும் ஆஸ்திகத்தோடு ஸ்ரீ பகவானை உபாசித்துக்கொண்டு எப்பொழுதும் மஹா யக்ஞங்களாலும் தேவதா அர்ச்சனுதிகளாலும் கோடிஅர்ச்சனைகளாலும் பிரார்த்தித்துக்கொண்டுவர சுபம் உண்டாகும், கடவுள் காப்பார்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். ஜீவன விஷயத்தில் சில மாறுதல்களும் இடம் மாறுதலும் ஏற்படும். சுபமான செலவுகள் அதிகமாகும். சிற்சில விரோதங்களையும் கொடுக்கும். கொஞ்சம் நஷ்டமும் உண்டுபண்ணும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும், அனு வசியமான செலவுகளும், அலைச்சல்களும் உண்டுபண்ணும். எல்லாக்காரியங்களிலும் இடையூறுகள் இருந்துகொண்டு இருக்கும். கலகங்களை உண்டுபண்ணும். செவ்வாய், புதன் சுபமாகும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தைத் தரும். வம்சம் விருத்தியாகும். புதிதாக ஜீவனலாபமும் ஸ்தாவர ஜங்கம கிரய விக்கிரயங்களும் நஷ்டதனம் வந்துசேருதலும், ஏற்படும். வியாழன் வெள்ளி சுபமாகும்,

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். தன தான்ய லாபமும் ஏற்பட்டு கொஞ்சம் நஷ்டமும் ஏற்படும். தெய்வ காரியங்களில் அலக்ஷியம் ஏற்படும். மேலோர் பெரியோர்களின் அன்பு குறையும். சனி ஞாயிறு சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். ஜீவன விருத்தி ஏற்படும். இல்லற சுகம் அதிகமாகும். உத்தியோகத்தில் உயர் பதவிகளும் வியாபாரங்களில் விசேஷமான லாபமும் கிடைக்கும். திங்கள் செவ்வாய் சுபமாகும்

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். குடும்பத்தொல்லை அதிகமாகும். வரவுசெலவு சமமாக இருக்கும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கும், ஸ்திரமான சுகமான வாசமும் ஏற்படும். புதன் வியாழன் சுபமாகும்,

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தைத் தரும். தெய்வபலம் ஓங்கும். அசாத்தியம் எல்லாம் சுலபசாத்தியமாகும் ஜீவனம் விருத்தியாகும், எப்பொழுதும் தெய்வீகமான காரியங்கள் நடந்துகொண்டிருக்கும். எதிர்பாரா்தபடி லாபம் கிடைக்கும். வெள்ளி சனி சுபமாகும்.

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். அனேகவிதமான தொழில்கள் ஏற்பட்டு அதன் மூலமாய் லாபங்களும் சௌகரியங்களும் ஏற்படும், கட்டிடங்கள் புதிதாகக் கட்டுவதன்மூலம் செலவுகள் அதிகமாகும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் சுபபலனைத் தரும். தீராத சிரமங்கள் தீரும், இல்லற சுகம் அதிகமாகும், புத்திராதிகளால் நன்மை உண்டாகும், ஆரோக்கியம் தரும். புதிதான தொழில் ஏற்படும். லாபம் உண்டாகும். செவ்வாய் புதன்சுபமாகும்.

10. மகரம்–உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம்

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். அடிக்கடி ஜீவன விஷயமாக அலைச்சல்கள் அதிகமாக இருந்து கொண்டு இருக்கும். ஸ்திரமில்லாத மேல் பதவிகளும் மேலோர் பெரியோர்கள் அன்பும் உலகப்பிரசித்தியும் ஏற்படும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

11. கும்பம் – அவிட்டம் ½-சதயம் –பூரட்டாதி–¾

கும்பராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தைத் தரும். சகலமான கவலைகளும் நிவர்த்தியாகும். உத்தியோகத்தில் மேல்பதவி ஏற்பட்டு ஸ்திரமாக இருக்கும். சகலகாரியங்களும் நன்மையாகவே நடக்கும். சனி ஞாயிறு சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி

மீனராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபமான பலனைத்தரும் வியாதி நிவர்த்தியாகும். பொறுப்புடன் கூடிய ஸ்திரமான சுகமான ஜீவனம் ஏற்படும். இல்லறத்தில் பலவிதமான மாறுதல்கள் ஏற்பட்டு நன்மையும் ஏற்படும், எல்லாம் தெய்வ பலத்தால் நன்மையாகவே நடக்கும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

உ

குருபாதம்

## தருமையாதீன வெளியீடுகளில்

# விற்பனைக்குரிய நூல்களின்

## விலைப் பட்டியல்

---

தமிழ் வடமொழி ஆங்கிலம் முதலிய மொழிகளில் சமயம், இலக்கியம், இலக்கணம், அறிவியல், முதலிய பல்வேறு பிரிவு களில் இதுவரை தருமையாதீன வெளியீடுகளாக வந்துள்ள நூல்கள் 642.

அவ்வப்போது அன்பர்கள் பலரும் இந்நூல்களை உடனுக்குடன் பெற்றுப் பயன் அடைந்துள்ளனர்.

கீழே குறிப்பிடப்பெறும் நூல்கள் மட்டுமே கைவசம் உள்ளன. அவற்றின் பட்டியலை விலை விவரங்களுடன் கீழே தருகின்றோம்.

எல்லோரும் படித்துப் பயன்பெறக் குறைந்த விலையுடன் கூடிய நூல்களின் விலைப்பட்டியல் தரப்பட்டுள்ளது.

இந்நூல்களின் விற்பனைத்தொகை "ஞானசம்பந்தம் பதிப்பகத்தைச்" சாரும். இத்தொகை சமய இலக்கிய வரலாற்று நூல்கள் வெளியிடப் பயன்படுத்தப்பெறும்.

நூல்களை விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு 15% கமிஷன் தரப்படும். பெற விரும்புவோர்:- கீழ்க்காணும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமபுரம் ஆதீனம், மாயூரம் P. O.

## I. தமிழ்நூல்கள் :-

**திருமுறைகள் :**

பன்னிரு திருமுறைகளையும் முறையாக உரைவிளக்கங்களோடு வெளியிட்டுத் தமிழுலகிற்கு வழங்கவேண்டும் என்று கருதிய 25ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் இதுவரை 9 திருமுறைகள் வெளியிடப் பெற்றுள்ளன. 10 ஆவது திருமுறை அச்சாகி வருகிறது.

ஒவ்வொரு திருமுறையும் சிறந்த விளக்கமான குறிப்புக்களோடு கூடியது. தலவரலாற்றுச் செய்திகள், கல்வெட்டுக் குறிப்புக்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், அற்புத நிகழ்ச்சிப் படங்கள், சிறந்த தலங்களின் படங்கள், சொல்லகராதி செய்யுள் அகராதி இவைகளும் சேர்க்கப்பெற்றுள்ளன. திருமுறைப் பதிப்புக்களில் தலைசிறந்தவை என்று பலராலும் பராட்டப்பெறுபவை. நல்ல தாளில் தெளிவான எழுத்துக்களில் அச்சிடப் பெற்றவை. அளவு டெம்மி 1 x 8.

**திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் :**

ரூ. பை.

**1. முதல் திருமுறை வெளியீடு எண். 290.**

திருப்பதிகங்களின் தொகை 136

குறிப்புரை: மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர், டெம்மி 1 x 8. பக்கங்கள் 756, ராப்பர் பைண்டு.

விலை ரூ. 3 – 50

**2. இரண்டாம் திருமுறை வெளியீடு எண் 317.**

திருப்பதிகங்களின் தொகை 122

குறிப்புரை : முதுபெரும்புலவர், திரு. முத்து, சு. மாணிக்கவாசக முதலியார். டெம்மி 1 x 8. பக்கங்கள் 806. காலிகோ பைண்டு.

விலை ரூ. 5—70

**3. மூன்றாம் திருமுறை. வெளியீடு எண். 348.**

திருப்பதிகங்களின் தொகை 125

குறிப்புரை : பண்டித திரு. அ. கந்தசாமிப்பிள்ளை. டெம்மி 1 x 8. பக்கங்கள் 902. காலிகோ பைண்டு.

விலை ரூ. 5—75

ரூ. பை.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் :

4. நான்காம் திருமுறை. வெளியீடு எண். 391.

திருப்பதிகங்களின் தொகை 113

குறிப்புரை :- முதுபெரும்புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார். டெம்மி 1 x 8. பக்கங்கள் 946. காலிகோ பைண்டு. விலை ரூ. 8—00

5. ஐந்தாம் திருமுறை. வெளியீடு எண். 500.

திருப்பதிகங்களின் தொகை 100

குறிப்புரை : வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர், பொழிப்புரை: வித்துவான், திரு. சொ. சிங்கார வேலன் எம். ஏ. டெம்மி 1x8. பக்கங்கள் 692. காலிகோ பைண்டு. விலை ரூ. 8—00

6. ஆறும் திருமுறை. வெளியீடு எண், 545.

திருப்பதிகங்களின் தொகை 99

குறிப்புரை : மகாவித்துவான், திரு. சி. அருணை வடிவேலு முதலியார். டெம்மி 1 x 8. பக்கங்கள் 1050. காலிகோ பைண்டு. விலை ரூ. 8—00

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

7. ஏழாம் திருமுறை. வெளியீடு எண். 555.

திருப்பதிகங்களின் தொகை 100

குறிப்புரை : மகாவித்துவான், திரு. சி. அருணை வடிவேல் முதலியார். டெம்மி 1 x 8. பக்கங்கள் 1050. காலிகோ பைண்டு. விலை ரூ. 8—00

மாணிக்கவாசக சுவாமிகள் :

8, எட்டாம் திருமுறை திருவாசகம், – திருக்கோவையார். வெளியீடு எண். 572.

பாடல்களின் தொகை 658 ; 400

குறிப்புரை :- மகாவித்துவான், திரு. சி. அருணை வடிவேல் முதலியார். டெம்மி 1 x 8, பக்கங்கள் 1180. காலிகோ பைண்டு. விலை ரூ. 9—00

ரூ. பை.

9. ஒன்பதாம் திருமுறை; திருவிசைப்பா - திருப்பல்லாண்டு வெளியீடு எண். 602.

பாடல்களின் தொகை 301

குறிப்புரை : மகாவித்துவான், திரு. சி. அருணை வடிவேல் முதலியார். டெம்மி 1 x 8. பக்கங்கள் 380. காலிகோ பைண்டு. விலை ரூ. 5—50

10. அகத்தியர் தேவாரத்திரட்டு.

வெளியீடு எண். 611.

சிவாலயமுனிவர்பொருட்டு அகத்தியரால் திரட்டித் தரப்பெற்றது. எட்டுத் தலைப்பில் 25 தேவாரத் திருப் பதிகங்களை உடையது. இதனை ஓதினால் தேவாரத் திருமுறைகள் அனைத்தையும் ஓதிய பயனைத் தரும்; தேவாரத் திருப்பதிகங்களோடு திருவாசகம், திருக் கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந் திரம் 11ஆம் திருமுறை, பெரியபுராணப் பாடல்கள்சில இவையும் சேர்க்கப் பெற்றுள்ளன. அளவு டெம்மி 1 x 8. பக்கங்கள் 88. விலை ரூ. 0—75

11 திருமுறை அருச்சனை. வெளியீடு எண். 510

திருமுறைகளை ஓதியே இறைவனை அர்ச்சிக்கவிரும்பு வோர்க்குஏற்றது. போற்றி என்ற தொடர்கள் அமைந்த பன்னிரு திருமுறைப் பாடல்களின் தொகுப்பாய் விளங் குவது. தொகுத்தவர் : திரு. ஆர். வேலாயுத ஓதுவா மூர்த்திகள். அளவு. கிரௌன் 1 x 8. பக்கங்கள் 58. விலை ரூ. 0—25

12 தமிழ் அருச்சனை முறை. வெளியீடு எண் 627

இறைவனுக்குச் செய்யும் தொண்டுகளில் அர்ச்சனை சிறப்புடையது. தமிழில் அவ்விறைவனை அர்ச்சித்து வழிபடுவதற்கு ஏற்ற நூலாய் விளங்குவது இந்நூல். சங்கல்பம், விநாயகர், முருகன், சுவாமி, அம்பாள் ஆகி யோர்க்குரிய நூற்றெட்டுப் பெயர்க்கோவை அமையப் பெற்றது. திருமுறைகள் முதலிய அருள் நூல்களில் வரும் தொடர்களால் அமைக்கப்பெற்றது. தமிழர்ச்சனை செய்ய விரும்புவோர்க்குப் பெரிதும் பயன்படுவது. அளவு. கிரௌன் 1 x 8. பக்கங்கள் 100. விலை ரூ. 0—50

ரூ. பை.

சாத்திரங்கள் :

13 மெய்கண்டசாத்திரம். வெளியீடு எண் 377

சைவசித்தாந்த சாத்திரங்கள் 14. ‘உந்தி களிறு உயர் போதம் சித்தியார் பிந்திருபா உண்மை பிரகாசம் வந்தஅருள், பண்புவினா போற்றி கொடிபாசமிலா நெஞ்சுவிடு உண்மை நெறி சங்கற்பம் உற்று’ என்ற வெண்பாவால் இந்நூல்களை அறியலாம். இவற்றோடு துகளறு போதம் முதலிய சில நூல்களும் இந்நூலில் சேர்க்கப்பெற்றுள்ளன. அளவு, கிரௌன் 1x8. பக்கங்கள். 472 விலை ரூ. 3—60

14 சித்தாந்தத் தெளிவியல். வெளியீடு எண் 589

சைவசித்தாந்த அடிப்படைப் பொருள்களை முறையாக எளியநடையில் உரைநடையாக்கித் தரப்பெற்றுள்ளது. 2ஆவது உலகத்தமிழ் மாநாட்டில் வெளியிடப்பெற்றது சைவ சித்தாந்தப் பொருள் நலங்களை எளிமையாய் உணர ஏற்ற நூல். அழகிய பிளாஸ்டிக் அட்டையுடன் கூடியது. எழுதியவர் மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார். அளவு, கிரௌன் 1x8. பக்கங்கள் 250. விலை ரூ. 2—75

15 மெய்கண்டான் சித்தாந்த மாநாட்டு மலர்:
வெளியீடு எண். 66.

தருமையாதீனத்தில் 28—8—41 முதல் ஐந்து நாட்கள் நடைபெற்ற மெய்கண்டான் சித்தாந்தமாநாடு, திருமுறைத் திருநாள் நிகழ்ச்சிகள் அனைத்தையும் தொகுத்து அளிக்கிறது இந்நூல். புகழ் பெற்ற இம்மாநாட்டில் அறிஞர் பலர் ஆற்றிய ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் நிழற்படங்கள் ஆதீனப்பணிகள் முதலியன விரிவாக இடம்பெற்றுள்ளன. அளவு, கிரௌன் 1x8. பக்கங்கள் 396. விலை ரூ. 1—00

16 சிவஞான போதம் (உரைநடையுடன்).
வெளியீடு எண். 526

சைவசித்தாந்த நூல்களின் முடிமணியாக விளங்குவது மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம். சித்தாந்த சாத்திரங்களின் முதல் நூலாய் விளங்குவது இது. சுருக்கமான உரைநடை வடிவில் நூற்கருத்தை

ரூ. பை.

அறிய உதவுவது. உரை நடை; தமிழ்ப் பேரறிஞர் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ. எம். எல். அளவு, கிரௌன் 1x8. பக்கங்கள் 54. விலை ரூ. 0—25

17 சிவஞானசித்தியார்சுபக்கம் (உரைநடையுடன்)
வெளியீடு எண் 534.

சிவஞானபோதத்தின் வழி நூலாய் விளங்கும் இதனை அருளிச் செய்தவர் அருணந்தி தேவ நாயனர். சைவ சித்தாந்த மெய்ப்பொருள்களை மிகவும் விரிவாகவும் விளக்கமாகவும் உதாரணங்கள் பலவற்றுன் கூறுவது. உரை நடை: தமிழ்ப்பேரறிஞர் திரு. கா. சுப்பிரமணியபிள்ளை, எம். ஏ., எம் எல், அளவு, கிரௌன் 1x8. பக்கங்கள் 168. விலை ரூ. 0—75

18 சிவப்பிரகாசம் (உரைநடையுடன்)
வெளியீடு எண் 529.

சிவஞான போதத்தின் சார்பு நூலாய் விளங்குவது. இதனை, அருளிச் செய்தவர் உமாபதிசிவம். சைவ சித்தாந்தப் பயிற்சியை மேற்கொள்வோர் முதலிற் பயில வேண்டிய நூல்; சுருக்கமும் விளக்கமும் வாய்ந்தது. உரை நடை: தமிழ்ப்பேரறிஞர் திரு. கா. சு. பிள்ளை எம். ஏ., எம். எல். அளவு, கிரௌன் 1x8 பக்கங்கள் 68. விலை ரூ 0—25

19 சித்தாந்த நூல்கள் 6 (உரைநடையுடன்)
வெளியீடு எண். 536

உமாபதி தேவர் அருளிச் செய்த திருவருட்பயன், வினவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், ஆகியவற்றின் உரை நடைநூல்; இலைமறை காய்போல் மறைந்து கிடக்கும் சைவசித்தாந்த நுண் பொருள்களை விளங்க விளக்கும் நூல் உரை நடை: தமிழ்ப் பேரறிஞர் திரு. கா. சு. பிள்ளை, எம். ஏ., எம் எல். அளவு கிரௌன் 1x8. பக்கங்கள் 84. விலை ரூ. 0—50

ரு. பை.

20 திருவுந்தியாரும் இருபா இருபஃதும் (உரைநடையுடன்) வெளியீடு எண். 539.

திருவியலூர் உய்யவந்ததேவர் அருளிச்செய்தது திருவுந்தியார். 45 கலித்தாழிசைகளில் ஆயது. அருணந்தி தேவர் அருளியது இருபா இருபஃது; வெண்பா அகவல் மாறிமாறி வருமாறு 20 பாடல்களினால் தமது ஞானசாரியரிடம் வினவும் முறையில் தோத்திர வடிவில் அமைந்த சாத்திரம். உரை நடை தமிழ்ப்பேரறிஞர் திரு. கா. சு. பிள்ளை எம். ஏ. எம். எல். அளவு, கிரௌன் 1x8. பக்கங்கள் 44. விலை ரூ 0—25

21. உண்மை விளக்கம் (உரைநடையுடன்) வெளியீடு எண் 502.

திருவதிகை மனவாசகங் கடந்தார் இயற்றியது. இவர், வினாவும் வினாக்களுக்கு ஆசிரியர் மெய்கண்ட தேவர் விடையருளுகின்ற நிலையில் அமைந்து விளங்குவது. 36 தத்துவங்களின் இயல்பு ஆணவத்தின் தன்மை, வினை இயல்பு, உயிர்த்தன்மை இறைஇயல்பு கூத்தப்பிரானது திருக்கூத்து உண்மை, அஞ்செழுத்து நிலை முதலியவற்றைக் கூறுவது. உரை நடை; தமிழ்ப்பேரறிஞர் திரு. கா. சு. பிள்ளை எம். ஏ. எம். எல். அளவு, கிரௌன் 1x8. பக்கங்கள் 41. விலை ரூ. 0—25

22. சங்கற்ப நிராகரணம் (உரைநடையுடன்) வெளியீடு எண். 547

உமாபதி தேவர் அருளிச்செய்த இந்நூல் அகச் சமயங்களாக உள்ளனவற்றை நுட்பமாக மறுக்க எழுந்தது சங்கற்பம் - கொள்கை நிராகரணம் - மறுத்தல். உரை நடை; தமிழ்ப் பேரறிஞர் திரு. கா. சு. பிள்ளை எம். ஏ., எம். எல். அளவு. கிரௌன் 1x8. பக்கங்கள் 84. விலை ரூ. 0—50

23 சித்தாந்த அட்டகம். வெளியீடு எண். 620

உமாபதி தேவ நாயனார் அருளிச்செய்த சித்தாந்த நூல்களாகிய சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சு விடு தூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் ஆகிய எட்டு நூல்கள் அடங்கியது. நூலாசிரியர் வரலாறும் சேர்க்கப்பெற்றது. அளவு, கிரௌன் 1x8. பக்கங்கள் 134. விலை ரூ. 0—50

ரூ. பை.

**24. சைவசித்தாந்த முதற்படி நூல்கள்.**
வெளியீடு எண் 616

சைவசித்தாந்த நூல்களைக் கற்பிக்கும் பொழுது திருவருட் பயன், உண்மை விளக்கம், சிவப்பிரகாசம் ஆகியவற்றை முதலில் கற்பித்தல் மரபு. இவற்றின் மூலங்களைமட்டும் கொண்டு விளங்குவது இந்நூல். அளவு. கிரௌன் 1x8 பக்கங்கள் 48. விலை ரூ 00—25

**25. சித்தாந்த சைவ வினாவிடை** வெளியீடு எண். 40

சைவசமய உண்மைகள் சித்தாந்த சாத்திரக் கருத்துக்கள், சமயாசாரியர் சந்தானாசாரியர் வரலாறுகள், புராண வரலாறுகள் மற்றும் சமய மரபுகள் இவற்றை எல்லோரும் அறிந்து பயனுற வினாவிடையில் அமைத்து எழுதியவர், திரு. கு. திருஞானசம்பந்தம் பிள்ளை. இரண்டாம் பதிப்பு அளவு, கிரௌன் 1x8. பக்கங்கள் 172.
விலை ரூ. 1—00

**26. சிவபோகசாரம் (உரைநடையுடன்)**
வெளியீடு எண். 144

தருமையாதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் தமது சிவானுபூதி நிலையில் அவ்வப்பொழுது அருளிச் செய்த வெண்பாக்களின் தொகுப்பாய் அமைந்தது. சித்தர் பாடல்களில் ஒன்றாய், பலரும் படித்துப் பயனுறும் நூலாய் விளங்குவது. விரிவான விளக்கவுரையோடு கூடியது. உரைவிளக்கம், மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார். இரண்டாம் பதிப்பு. கிரௌன். 1x4 பக்கங்கள் 154.
விலை ரூ. 2—25

**27. ஞானாவரண விளக்கமும் மாபாடியமும்.**
வெளியீடு எண் 367, 444.

சிவஞான சித்தியாருக்கு விளக்க நூலாக ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளிய நூல் ஞானாவரண விளக்கம். இந்நூலுக்கு ஸ்ரீ வெள்ளியம்பலவாணர் செய்த பேருரை மாபாடியம் எனப்பெறும். வடமொழி, தென்மொழியில் எண்ணற்ற நூல்களைக் கற்றுணர்ந்த இம்முனிவர் வகுத்த பேருரை வடமொழியில் உள்ள பலநூல் மேற்கோள்களோடு விரிவாக அமைந்துள்ளது. உரை

ரூ. பை.

யில் வரும் மேற்கோள்கள் பலநூல்களின் மூல பாடங்களை அறியத் துணைபுரிவன. தருமையாதீனத்தில் போற்றிப் பாது காக்கப்பெற்ற இந்நூல் முதன் முறையாக அச்சிடப்பெற்று இரண்டு தொகுதிகளாக வெளி வந்துள்ளது. சிவஞான சித்தி இரண்டாம் சூத்திரம் முடிய உள்ள விளக்கங்களின் தொகுதி இவை.

முதல்தொகுதி - பரபக்கம். ஞானந்தம், அளவியல் பக்கங்கள் 590.

இரண்டாம் தொகுதி சுபக்கம், பக்கங்கள் 365. அளவு. கிரெளன் 1 x 4 இரண்டு தொகுதிகள் விலை ரூ. 10—00

28. குருஞானசம்பந்தர் அட்டகம். வெளியீடு எண் 626.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளிய சொக்கநாத வெண்பா, சிவபோகசாரம், சொக்கநாதக் கலித்துறை, ஞானப்பிரகாச மாலை, திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல், சோடசகலாப் பிராசாத சட்கம், முத்தி நிச்சயம், நவரத்தினமாலை ஆகிய எட்டு நூல்கள் அடங்கியது நூல்நுதலிய பொருள் தரப்பெற்றுள்ளது. குருஞானசம்பந்தர் வரலாற்றுச் சித்திர விளக்கங்களுடன் அமைந்தது. அளவு, கிரெளன் 1x8 பக்கங்கள் 154 விலை ரூ 1—00

29. திருவருட்பாத் திரட்டு. வெளியீடு எண். 423.

தருமையாதீனம் 10 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிகர் செய்தருளிய தோத்திர நூல்களின் தொகுப்பு. இவர்கள் காசியாத்திரை செய்து அங்குள்ள மூர்த்திகளின்மேல் பாடியருளிய தோத்திரங்களும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி வேளூர் ஸ்ரீ செல்வ முத்துக்குமாரர் மீது பாடியதோத்திர நூல்களும்அமைந்துள்ளன. கற்பனை நயங்களும் பத்திச்சுவையும் பொருந்தி கற்போர் நெஞ்சைக்கனிவிக்கும் நூல். வடசொல்லாட்சிக் குரிய விளக்கப்பொருள்களும் தரப்பெற்றுள்ளன. தக்ஷிணா மூர்த்தி திருவருட்பாவிற்கு விரிவான விளக்கஉரை உள்ளது. அளவு, கிரெளன் 1x8. பக்கங்கள் 132. விலை ரூ. 1—00

ரூ. பை.

30, செந்தமிழ்ப் பூம்பொழில் ( 2 ஆம் தொகுதி )
வெளியீடு எண். 497

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அவ்வப்போது அருளிய அருளுப தேசங்களின் தொகுப்புநூல். 61 அருளுரைகள் பல்வேறு தலைப்புக்களில் சமய நுண் பொருள்கள், பக்தி அனுபவங்கள் முதலியவற்றை விரித்துரைப்பனவாய் அமைந்துள்ளன. அளவு, டெம்மி. 1x8 பக்கங்கள் 324. விலை. ரூ. 1—75

31 செந்தமிழ்ப் பூம்பொழில் ( 3 ஆம் தொகுதி ).
வெளியீடு எண். 564.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் பன்னிரு திருமுறைகள் பதினன்கு சாத்திரங்கள் ஆகியவைகளைப் பற்றி வழங்கிய அருளுரைகளின் தொகுப்பு. அருளு ரைகள் தொடர்பாக, திருமுறை, சாத்திரம் பற்றி, ஞான சம்பந்தம்' இதழில், அவ்வப்பொழுது வெளிவந்தவை. அளவு டெம்மி. 1x8. பக்கங்கள் 284 விலை ரூ. 1—00

32 செந்தமிழ்ப் பூம்பொழில் ( 4 ஆம் தொகுதி ).
வெளியீடு எண். 6I5

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் ஆதீனக் குருமுதல்வர் அருளிய அருள் வாக்குகளைப் பற்றி அவ்வப்போது வழங்கி யருளிய - ஞானசம்பந்தம் இதழில் அருளுரைகளின் தொடர்பாக வெளிவந்த தொகுப்புநூல். அருளாளர்களின் திருவாக்குகளுக் குக் கூறியருளிய அருள் விளக்கங்களும் உள்ளன. அளவு, டெம்மி. 1x8 பக்கங்கள் 362. விலை ரூ. 2—75

**தோத்திரங்களும் - இலக்கியங்களும்.**

33 கந்தபுராணச் சுருக்கம் வெளியீடு எண். 557.

தருமையாதீனச் சார்பில் மைசூர் மன்னரைச் சென்று கண்டு அவர் போற்றுதலுக்கு உரியவராய் விளங்கிய ஸ்ரீசம்பந்தசரணலயர், அம்மன்னரின் வேண்டு கோளுக்கிசைய 10345 பாடலால் அமைந்துள்ள கந்த புராணத்தை 1049 - பாடலில் கதைகளைச் சிறிதும் விடா

ரூ. பை.

மல் நல்ல நயங்களோடு கூடச் சுருக்கிப்பாடியருளிய நூல். நூலாசிரியர் தமது ஞானசிரியர் மீது பாடிய சிகாரத்தின மாலையும் இதில் இணைந்துள்ளது. ஆசிரியர் வரலாறு, நூலின் நயங்கள் ஆகியன தரப்பெற்றுள்ளன. அளவு, கிரௌன். 1x8 பக்கங்கள். 308

விலை. ரூ. 2—00

**34 கந்தபுராணத் திரட்டு. வெளியீடு எண். 596**

முப்பெரும் புராணங்களில் ஒன்றாய் விளங்குவது கச்சியப்பர் இயற்றிய கந்தபுராணம். முருகப்பெருமான் வரலாற்றைக் கூறும் விரிவான இந்நூலின் 10345 செய்யுட்களில் 1420 பாடல்களைக் கதைத் தொடர்பு மாறாமலும், சிறந்த பாடல்களை விடாமலும் சுருக்கித் திரட்டப்பெற்றது. கந்த விரத நாட்களில் பாராயணம் செய்தற்கு ஏற்றது. அளவு, கிரௌன். 1x8 பக்கங்கள் 277

விலை ரூ. 2—00

**35. மண்சுமந்த திருவிளையாடல்**

**வெளியீடு எண் 603.**

பரஞ்சோதி முனிவர் அருளிச்செய்த திருவிளையாடற் புராணத்திலுள்ள இப்படலத்தை, ஸ்ரீ குருஞானசம்பந்தரின் கரங்களில் கண்ணுக்கினியராய் எழுந்தருளிய ஸ்ரீசொக்கநாதர்க்குத் தருமையில் நிகழும் ஆவணிமூல விழாவில் ஓதி மகிழ்தற்கும் இத்திருநாளில் அன்பர்கள் பலரும் ஓதிப் பயன்பெறுதற்கும் வெளியிடப்பெற்றது. அளவு, கிரௌன். 1x8 பக்கங்கள் 50.

விலை ரூ. 0—30

**36. தாயுமான சுவாமிகள் பாடல்.**

**வெளியீடு எண் 564.**

உண்மை, தத்துவ உணர்வு, உருக்கம் ஆகிய வற்றைத்தருவது. பலரும் போற்றிப் படித்து இன்புறுவது. தாயுமானசுவாமிகள் தருமையாதீனத்துக்குச் சொந்தமான திருச்சிராப்பள்ளி மௌனமடத்தில் எழுந்தருளி விளங்கிய ஸ்ரீ மௌன சுவாமிகளிடம் உபதேசம் பெற்றவர். பாடல்கள் எளிதில் பொருள் விளங்கும் வண்ணம் சந்தி பிரித்துப் பல தலைப்புக்களுடன் தெளிவாக அச்சிடப்பெற்றுள்ளன. தாயுமானவர் வரலாறும் சேர்க்கப்பெற்றுள்ளது. அளவு கிரௌன் 1x8 பக்கங்கள் 388.

விலை ரூ. 2—00

ரூ. பை.

37. திருநூல் ஐந்து. வெளியீடு எண் 583.

உமாபதிசிவம் அருளிய திருமுறைகண்டபுராணம், திருத்தொண்டர் புராணம், திருப்பதிகக்கோவை, திருப்பதிக்கோவை ஆகியனவும் அறுபத்துமூவர் திருநக்ஷத்திரங்களும் ஆகிய ஐந்து நூல்களின் தொகுப்பு. குறிப்புரை, வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் M.A., அளவு கிரௌன் 1x8. பக்கங்கள் 84 விலை ரூ 0—50

38. சந்தானசாரியர் புராணம் (குறிப்புரை, உரை நடையுடன்). வெளியீடு எண் 561.

சந்தானசாரியர்களாகிய மெய்கண்டார், அருணந்தி தேவர், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் ஆகிய நால்வர் வரலாறுகளைச் சுருக்கமாகத் தெரிவிக்கும் நூல். ஆசிரியர் திரு. சுவாமிநாத தேசிகர். குறிப்புரை, புராணப் பொருளைத் தெரிவிக்கும் உரை நடைகளுடன் கூடியது. அளவு கிரௌன் 1x8 பக்கங்கள் 68. விலை ரூ. 0—50

39. திருத்தொண்டர் திருவந்தாதி. வெளியீடு எண் 544.

சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையின் வழி நூலாய் விளங்குவது. நம்பியாண்டார் நம்பிகள் அருளியது. பதினொன்றும் திருமுறையில் ஒன்று. நாயன்மார் வரலாறுகளை ஒன்றிரண்டு பாடல்களால் விளக்கி உரைக்கும் இந்நூலில் குறிப்புரைகளும், நாயன்மார் திருநக்ஷத்திரங்களும் சேர்க்கப்பெற்றுள்ளன. அளவு கிரௌன் 1x8 பக்கங்கள் 96. விலை ரூ. 0—50

40 ஆளுடையபிள்ளையார் மும்மணிக்கோவை : வெளியீடு எண். 585

பதினொன்றும் திருமுறையில் இடம்பெற்ற இந்நூல் நம்பியாண்டார் நம்பிகள் பாடியருளியது. மூன்று மணிகளால் ஆகிய மாலை போல அகவல், வெண்பா, கலித்துறை ஆகிய பாடல்கள் விரவிய நூல். ஞானசம்பந்தர் மீது பாடப் பெற்ற தோத்திர நூல். விளக்கமான குறிப்புரை பொழிப்புரைகள் தரப்பெற்றுள்ளன. அளவு. கிரௌன் 1x8 பக்கங்கள் 40. விலை ரூ. 0—25

ரூ பை

41 ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி
வெளியீடு எண். 57

பதினொன்றும் திருமுறையைச் சேர்ந்த இந்நூல் நம்பியாண்டார் நம்பிகளால் பாடியருளப்பெற்றது. 100 பாடல்களில் ஞானசம்பந்தரின் பெருமையை விளக்கி அந்தாதியாகப் பாடப் பெற்றநூல். குறிப்புரையுடன் கூடியது. அளவு கிரௌன் 1x8 பக்கங்கள் 50 விலை ரூ. 0—25

42 கோயில் நான்மணிமாலை. வெளியீடு எண். 608

பதினொன்றும் திருமுறையில் பட்டினத்துப் பிள்ளையார் அருளிய இந்நூல் சிவானுபவத்தையும் சித்தாந்த உண்மைகளையும் கொண்டு மிளிர்வது. நான்கு மணிகள் கோத்த மாலைபோல் வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் இவை மாறி மாறி அமைய 40 பாடல்களைக்கொண்டது. விரிவான குறிப்புரைகள் தரப் பெற்றுள்ளன. அளவு கிரௌன் 1x8 பக்கங்கள் 54.
விலை ரூ. 0—25

43 திருக்கழுமல மும்மணிக்கோவை:
வெளியீடு எண்: 584

பதினொன்றும் திருமுறையில் பட்டினத்துப் பிள்ளையார் அருளிய இந்நூல் சீகாழிப்பதியில் எழுந்தருளியிருக்கும் இறைவன் புகழை விரித்துவைப்பது. குறிப்புரை விளக்கங்கள் தரப்பெற்றுள்ளன. அளவு கிரௌன்1 x8 பக்கங்கள் 42. விலை ரூ. 0—25

44 திருக்கயிலாய ஞான உலா:
வெளியீடு எண் 479

பதினொன்றும் திருமுறைப் பிரபந்தங்களில் ஒன்று. சேரமான் பெருமாள் அருளியது. இறைவனது சொரூப தடத்த இலக்கணங்களுடன் எழுவகைப் பருவப் பெண்கள் இறைவனைக் கண்டு காதல்கொள்ளும் நிலையினை விளக்கிப் பக்தி, தத்துவ உணர்வுகளை விளைப்பது. விரிவான பொருள் விளக்கங்கள் கூறப் பெற்றுள்ளன. அளவு கிரௌன் 1x8 பக்கள்கள். 52.
விலை ரூ. 0—30

ரு பை.

45 கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி.
வெளியீடு எண். 567.

நக்கீரதேவர் கயிலை காளத்தி இரண்டையும் இணைத்து ஒவ்வொரு பாடலாக மாறிவரப் பாடிய அந்தாதி நூல் பதினொன்றும் திருமுறைப் பிரபந்தங்களில் ஒன்று. நக்கீரர் தமது பிணி நீங்கப் பெற்றுப் பாடிய தோத்திரம். அளவு கிரௌன் 1x8 பக்கங்கள் 46

விலை ரூ. 0—25

46, பிராசாத நான்மணிகள். வெளியீடு எண் 640.

மனத்தை ஒருமுகப்படுத்தித் தியான நிலையில் நிற்கச் செய்தற்குப் பிராசாத யோகம் சிறந்தது. இதனை உணர்த்தும் நூல்கள் நான்கின் தொகுப்பு இந்நூல். கமலைஞானப்பிரகாசர் அருளிய பிராசாத மாலை, ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளிய பிராசாத சட்கம், காவை ஸ்ரீ அம்பலவாணர் அருளிய பிராசாத அகவல், சீகாழி வள்ளல் சந்தானத்தில் ஒருவர் அருளிய பிராசாத தீபம் ஆகியன இந்நூலில் இடம் பெற்றுள்ளன. உரை: மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேலு முதலியார். அளவு கிரௌன் 1x8 பக்கங்கள் 86.

விலை ரூ 0—50

47. சிவக்ஷேத்திர சிவஞானக் கலிவெண்பா.
வெளியீடு எண் 549.

உமாபதி சிவம் அருளிய இந்நூல் பாடல்பெற்ற சிவதலங்களில் உள்ள இறைவன் இறைவி திருப்பெயர்களைத் தொகுத்துத் தருவது. அனைத்து ஆலயங்களிலும் விளங்கும் இறைவனை நினைந்து வழிபடத் துணை செய்வது. குறிப்புரையுடன் கூடியது. முடிவில் அப்பர் அருளிய க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகப் பதிகம் சேர்க்கப்பெற்றுள்ளது. அளவு 1x8 பக்கங்கள் 48

விலை. ரூ. 0—25

48. காசிக்கலம்பகம் வெளியீடு எண். 597.

குமரகுருபரர் அருளிய பிரபந்தம். காசி மாநகர்ச் சிறப்பு கங்கையின் பெருமை விசுவேசனின் அருள் விளக்கம் ஆகியன குறித்துக்கலம்பக உறுப்புக்களோடு பாடப்பெற்ற இலக்கியம். குறிப்புரையுடன் கூடியது. அளவு டெம்மி 1x8 பக்கங்கள் 68. விலை ரூ 0—25

ரூ. பை.

**49. திருக்குறள் அறத்துப்பால் (பரிமேலழகர் உரையுடன்) வெளியீடு எண். 587**

உலக நாடுகள் பலவும் போற்றும் உயர்தனித் திருவில் திருக்குறள். தெய்வப்புலவர் திருவள்ளுவர் அறம் பொருள் இன்பம் என்ற மூன்று பிரிவுடையதாய் இந்நூலை அருளிச் செய்தார். திருக்குறள் உரைகளில் சிறந்து திகழ்வது பரிமேலழகர் உரை. இவ்வுரையோடு அறத்துப்பால் சந்திபிரித்துத் தெளிவுப் பதிப்பாக வெளிவந்துள்ளது. அளவு கிரௌன் 1x8 பக்கங்கள் 230

விலை ரூ. 1—50

**50. சச்ச புட வெண்பா (குறிப்புரையுடன்). வெளியீடு எண் 245.**

வரகுண ராம பாண்டியர் செய்த பழைமையான இசைத்தமிழ்த் தொடர்புடைய தாளசாத்திர நூல் சச்சபுடம் முதலான 108 தாள பேதங்களைக் கூறுவது. தருமையாதீனப் புத்தகசாலையிலிருந்த ஏட்டிலிருந்து எடுத்து அச்சிடப்பெற்றது. குறிப்புரை குறியீட்டு விளக்கங்களுடன் கூடியது. 173 வெண்பாக்களால் அமைந்தது. அளவு, கிரௌன் 1x8. பக்கங்கள் 82.

விலை. ரூ. 0—50

**51. தண்டலையார் சதகம். வெளியீடு எண். 577.**

படிக்காசு முனிவர், அருளிய அறவுரைகள் அடங்கிய 100 பாடல்களைக் கொண்டது. பாடல்தோறும் இறுதியில் ஒரு பழமொழி அமைந்துள்ளது. இந்நூலுக்குப் பழமொழிவிளக்கம் என்ற பெயரும் உண்டு. தண்டலை என்ற தலத்து இறைவர் மேல் பாடப்பெற்றது. படிக்காசு முனிவர் வரலாறு, பாடற் குறிப்புக்கள் உள்ளன. அளவு, கிரௌன் 1x8. பக்கங்கள் 68

விலை ரூ. 0—50

**52. கிளிவிடு தூது. வெளியீடு எண் 392.**

தருமையாதீனம் 8 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அழகியதிருச்சிற்றம்பல தேசிக சுவாமிகள் மீது சொர்க்கபுரம் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ அழகிய திருச்சிற்றம்பல சுவாமிகள் பாடியது. தமது குருமூர்த்திகள் மீது

ரூ. பை.

கிளியைத்தூது விடுத்து மாலை பெற்று வருமாறு சொல்லியனுப்புவது போலத் தமிழ்மணமும் சித்தாந்த சாத்திரக் கருத்துக்களும் பொதுளப் பாடப்பெற்றது. இரண்டாம் பதிப்பு. அளவு, கிரௌன் 1x8. பக்கங்கள், 22. விலை ரூ. 0—25

**53. பொன் வண்ணத் தந்தாதி. வெளியீடு எண். 594.**

சேரமான் பெருமாள் நாயனர் அருளியது. பதினெொன்ரும் திருமுறைப் பிரபந்தங்களில் ஒன்று. தில்லைப் பெருமான் மேல் பாடப்பெற்றது. இந்நூலை அருளிச் செய்யக் கேட்ட கூத்தப்பெருமான் இதற்குப் பரிசிலாகத் திருவடிச் சிலம் போசையைக் கேட்பித்தார் என்பது வரலாறு. விளக்கக் குறிப்புரையுடன் கூடியது. அளவு, கிரௌன் 1x8. பக்கங்கள் 40. விலை. ரூ, 0—25

**54. தென்கயிலை வடகயிலைத் திருப்பதிகங்கள். வெளியீடு எண் 447.**

தென்கயிலாயமாகிய திருவையாற்றுத் திருப்பதிகங்களுடன் வடகயிலைத் திருப்பதிகங்களையும் இணைத்து அச்சிடப்பெற்றது. கயிலைக்காட்சி கயிலைப் பதிகங்கள் என்ற தலைப்பில் கட்டுரைகளும் பதிகக் கருத்துரைகளும் தரப்பெற்றுள்ளன. அளவு, கிரௌன் 1x8. பக்கங்கள் 132. விலை ரூ. 0—50

**55. திருவருட்டுறைப் புராணம் வெளியீடு எண் 651.**

நடுநாட்டில் இறைவன் சுந்தரரைத் தடுத்தாட் கொண்டருளிய தலம் திருவெண்ணெய்நல்லூர். கோயிற்பெயர் - திருவருட்டுறை. வடமொழியில் பிரமாண்டபுராணத்தில் வரும் இத்தல வரலாறுகளைத் தமிழில் புராணமாக அளித்தவர், திரு. வடிவேல் முதலியார். பாயிரம் முதலாக 17 தலைப்புக்களில் நூற் செய்திகள் அமைந்துள்ளன. பாடல்கள் 704. அளவு, கிரௌன் 1x8. பக்கங்கள் 176. விலை ரூ. 1—50

**56. கந்தக்கடவுள் வாழ்த்தும் வரலாறும். வெளியீடு எண் 607.**

கந்தர் அலங்காரம், கந்தர் கலிவெண்பா, கந்த புராணப் பொருட் சுருக்கம் ஆகியவை அடங்கியது சிறந்த பாராயண நூலாகக் கொள்ளத்தக்கது. அளவு, கிரௌன் 1x8. பக்கங்கள் 58. விலை ரூ. 0—25

ரூ. பை.

**57. திருவாலவாய்த் தோத்திரத்திரட்டு.**
வெளியீடு எண் 628.

விராட் புருடனுக்குத் துவாத சாந்தத்தலம் மதுரை. இத் தலத்தைப் பற்றிய தோத்திரங்கள் அடங்கியது இந்நூல். தேவாரத் திருப்பதிகங்கள், திருவாசகம், திருப்புகழ், திருவிளையாடற் புராணம், போற்றிக்கலி வெண்பா, நாள் வழிபாட்டுப் பாடல்கள் அடங்கியது. அளவு, கிரௌன் 1x8 பக்கங்கள் 60. விலை ரூ. 0—25

**58. புட்பவிதி. வெளியீடு எண் 638.**

சிவபூசைக்கு முதலில் தேவைப்படுபவை பத்திர புட்பங்கள். அவற்றை முறையறிந்து பறித்துப் பூசித்தல் வேண்டும். சிவபூசைக்குரிய மலர், தளிர் வகைகள், தன்மைகள், பயன்கள் முதலியவற்றை இந்நூல் தெரிவிக்கிறது. இயற்றியவர்: கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர். அளவு, கிரௌன் 1x8. பக்கங்கள் 34. விலை ரூ. 0—25

**59. குருவழிபாடு. வெளியீடு எண் 635.**

சைவர்களாகப் பிறந்தவர்கள் சைவசமய ஆசாரியர்களது வரலாற்றைத் தெரிந்துகொள்வது இன்றியமையாதது. அவர்கள் நன்கு தெரிந்துணர்வதற்கு ஏற்ற வகையில், சைவசமயாசாரியர் சந்தானசாரியர் வரலாறுகள், சேக்கிழார் நாயனார் வரலாறு, தருமையாதீனக் குருபரம்பரை வரலாறு, திருமுறை விளக்கம், மெய்கண்ட சாத்திரங்களின் விளக்கம் ஆகியவற்றுடனும், சொக்கநாதவெண்பா, சிவபோகசாரப் பாடல்கள் சிலவற்றுடனும், சைவசமயாசாரியர் சந்தானசாரியர் படங்களுடனும் வெளியிடப்பெற்றுள்ளது. அளவு. கிரௌன் 1x8. பக்கங்கள் 198. விலை ரூ. 1—00

**60. முத்துக்குமாரசுவாமி அந்தாதி.**
வெளியீடு எண். 593

வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரர்மேல் பாடப்பெற்ற தோத்திர நூல். ஆசிரியர் முத்துக்குமாரதாசர். திரிபு யமகம் முதலிய சொல்லணிகளோடு அமைந்த 100

ரூ. பை.

பாடல்களைக் கொண்டது. தருமையாதீனம் 10 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் இயற்றிய முத்துக்குமாரசுவாமி திருவருட்பாவும் இணைந்துள்ளது. குறிப்புரை : வித்துவான். திரு. முருகையா தேசிகர். அளவு, கிரௌன் 1x8. பக்கங்கள் 44. விலை ரூ. 0—25

**61 சைவாநுட்டான அகவல் - சிவபூசை அகவல்**
**வெளியீடு எண். 487**

கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் இயற்றிய இவ்விரு நூல்களும் சைவானுட்டான விதிகளையும் சிவபூசை விதிகளையும் கூறுவன. யாழ்ப்பாணம் அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் அவர்களின் உரை விளக்கத்துடன் கூடியது. அளவு கிரௌன் 1x8 பக்கங்கள் 96.

விலை ரூ. 0—50

## 2. வடமொழித் தொடர்பான நூல்கள்

**62. சிவபூசா விதி. வெளியீடு எண். 46**

ஆசாரியரை அடுத்து சிவதீக்ஷை பெற்றுச் சிவபூசை செய்வோர் பின்பற்றிச் செய்தற்குரிய விதிமுறைகளை அறிய உதவுவது. அகோர சிவாசாரியார் பத்ததியைப் பின்பற்றி எழுதப்பெற்றுள்ளது. எழுதியவர் திரு. சா. முத்துவேலு தேசிகர். வடமொழி தமிழ் ஆகிய இருமொழிகளிலும் மந்திரங்களும் விளக்கங்களும் தரப்பெற்றுள்ளன. இரண்டாம் பதிப்பு. அளவு, கிரௌன் 1 x 8 பக்கங்கள் 94.

விலை ரூ. 0—50

**63. சைவானுட்டான விதி வெளியீடு எண். 47**

சைவர்களாகப் பிறந்தவர்கள் சமயதீக்ஷைபெற்று சைவாநுட்டானம் செய்தற்குக் கடமைப்பட்டவர். அனுட்டானம் மேற்கொள்வோர்க்கு இந்நூல் விதிமுறைகளைத் தெரிந்துகொள்ள உதவுவதாகும். எழுதியவர். திரு. சா. முத்துவேலு தேசிகர். அளவு, கிரௌன் 1x8. பக்கங்கள் 28. விலை ரூ. 0—25

ரூ. பை.

64. துர்க்கா சப்தசதி விளக்கம்.

வெளியீடு எண். 414

ஸ்ரீ துர்க்கா தேவியின் வரலாறு வீரச்செயல்கள் முதலியவற்றைக் கூறும் சப்தசதி என்ற பகுதியோடு குலார்ணவத்தில் கூறப்பட்ட சகஸ்ரநாம ஸ்தோத்திரமும் அடங்கியது. சில காம்ய மந்திரங்களும் சப்தசதி விளக்கமும் தமிழில் தரப்பெற்றுள்ளன. அஷ்டலக்ஷ்மி, துர்க்காதேவி ஸ்ரீ வித்யா சக்ரப் படங்களும் உள்ளன. அளவு கிரெளன் 1 x 8 பக்கங்கள் 104.

விலை ரூ. 1—00

65. நித்ய பூஜா லக்ஷண சங்கிரகம்.

வெளியீடு எண். 260.

காமிகம், காரணம் முதலிய ஆகமங்களில் கூறப்படும் சிவ பூசைக்கு முக்யமான காலம், அபிஷேக ஆராதனைப் பொருள்கள், அவற்றால் விளையும் பயன்கள் ஆகியன இந்நூலில் கூறப்பெற்றுள்ளன. ஆன்மார்த்த பரார்த்த பூஜை செய்வோர் அனைவரும் படித்துப் பயனுறத்தக்கது. நாகர கிரந்த எழுத்துக்களில் விதிகளும் தமிழில் விளக்கமும் தரப்பெற்றுள்ளன. அளவு. கிரெளன். 1 x 8 பக்கங்கள் 232. விலை ரூ. 1—50

## 3. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் தலயாத்திரை நூல்கள்.

66. திருக்கயிலாய யாத்திரை.

வெளியீடு எண், 473.

இறைவன் உறையும் திருமலை திருக்கயிலைமலை. இமய உச்சியில் விளங்கும் இக்கயிலை மலைக்குச் சென்று தரிசித்தல் சிறப்புடையது. அரிய இவ்யாத்திரையை மேற்கொண்டு அன்பர்கள் பலருடன் சென்று கயிலை நாதனைக் கண் குளிரக்கண்டு கயிலைக் குருமணி என்ற சிறப்புப் பெயர் பெற்றவர்கள் தருமையாதீனம் 25ஆவது குருமகா சந்நிதானம் அவர்கள். குருமணி அவர்களின் யாத்திரை நூலாக வெளிவந்துள்ள இந்நூல் சிறந்த

ரு. பை.

அருள் அனுபவங்கள் கயிலைச் சிறப்பு முதலிய பல்வேறு இலக்கியப் படைப்புக்களை உடையது. 91 யாத்திரைப் படங்கள் உள்ளன. எழுதியவர்; திரு. அ. கல்யாண சுந்தர தேசிகர். அளவு கிரௌன் 1 x 8. பக்கங்கள் 730.

விலை ரூ. 5—00

67. அமரநாதம். வெளியீடு எண் 428.

இமயப் பெருந்தலங்களில் ஒன்றான அமர நாதம் குகையில் உருவாகும் பனிப்படிவச் சிவலிங்கக் காட்சி தெய்விகமான அருட் காட்சி. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அமர நாதயாத்திரையை மேற்கொண்டு அமர நாதனை வழிபட்டருளியதையும், அவர்களது யாத்திரை அனுபவங்களையும் விவரிக்கும் நூல். எழுதியவர்: திரு. அ. கல்யாணசுந்தர தேசிகர். அளவு கிரௌன் 1 x 8 பக்கங்கள் 226.

விலை ரூ, 3—00

68. பசுபதிநாதம். வெளியீடு எண். 416,

பசுபதிநாதம் நேபாளத்தில் உள்ள தலம். இமயப் பெருந்தலங்களில் ஒன்று. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் யாத்திரை நூலாகவும் அனுபவ இலக்கிய மாகவும் விளங்குவது. பல்வேறு செய்திகளுடன் வண்ணப்படங்கள் பலவற்றையும் கொண்டு இலங்கு வது. அளவு கிரௌன் 1 x 8. பக்கங்கள் 270·

விலை ரூ, 3—00

69. ஜோதிர்லிங்கத் தலங்கள்

வெளியீடு எண் 474.

இறைவன் சோதி வடிவில் எழுந்தருளி விளங்கிய தலங்களான சோமநாதம், ஸ்ரீசைலம், உஜ்ஜைனி ஓங் காரம், பரலிவைத்திய நாதம், பீமசங்கரம், இராமேசுரம், நாகேசம், வாரணசி, திரியம்பகம், கேதாரம், குஸ்மேசம், ஆகிய 12 திருத்தலங்களின் சிறப்புக்களுடன் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் இத்தல யாத்திரையை விவரிக்கிறது. எழுதியவர்: வேதாந்தசிரோமணி திரு. K. இராஜகோபால சாஸ்திரிகள். அளவு கிரௌன் 1x8 பக்கங்கள் 124.

விலை ரூ. 1—50

## 4. மலர்கள்

ரூ. பை.

70. ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியின் கனகாபிஷேக விழா மலர்.

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கட்கு 12—3—61ல் நடைபெற்ற கனகாபிஷேகத் திருநாளில் வெளியிடப் பெற்றது. திருமுறைகள் சாத்திரங்கள், இசை, அருளிலக்கியங்கள் முதலிய பல்வேறு பொருள்களைப்பற்றிய 57 ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கியது. 27 மூவண்ணப் படங்கள் மலரை அழகுறுத்துகின்றன. அளவு கிரௌன் 1x4 பக்கங்கள் 328. விலை ரூ. 5—00

71. புள்ளிருக்குவேளூர் மகாகும்பாபிஷேக மலர்.
வெளியீடு எண் 610

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயிலில் மிகச் சிறப்பாக நடைபெற்ற மகாகும்பாபிஷேக விழா நாளில் வெளியிடப்பெற்றது. சாத்திரம், தோத்திரம், கலைகள், கல்வெட்டுக்கள் முதலிய பல்வேறு ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கியது. மூதறிஞர் பலரின் எழுத்தோவியங்களுடனும் வண்ணப் படங்களுடனும் வெளியிடப்பெற்றது. அளவு டெம்மி 1 x 4. பக்கங்கள் 532. விலை ரூ. 14—00

72. திருவையாறு மகாகும்பாபிஷேக மலர்.
வெளியீடு எண். 632.

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீஸ்வரசுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற மகாகும்பாபிஷேகத் திருநாளில் வெளியிடப்பெற்றது, சாத்திர தோத்திரங்கள் சமய மரபுகள் சப்தஸ்தான விழா முதலிய பல தலைப்புக்களில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கியது. வண்ணப்படங்கள் மலரை அழகுறுத்துகின்றன. அளவு கிரௌன் 1x4. பக்கங்கள் 235. விலை ரூ. 5—00

ரூ. பை.

73. ஞானசம்பந்தம் வெள்ளிவிழா மலர்.

தமிழுலகில் 25 ஆண்டுகளாகச் சமயப்பணி ஆற்றிய 'ஞானசம்பந்தம்' இதழ் வெள்ளி விழாக்கொண்ட நினைவாக வெளியிடப்பெற்றது. ஆடல் வல்லானின் அழகிய அட்டையுடன் 30 தலைப்புக்களில் அறிஞர்கள் பலர் எழுதிய கட்டுரை கவிதைகளுடன் கூடியது; வண்ணப் படங்கள் பலவும் அடங்கியது, அளவு டெம்மி 1 x 4. பக்கங்கள் 94. விலை ரூ. 1—00

74 திருவாரூர் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூசை விழாமலர் சைவசித்தாந்தம் வினாவிடை.

திருநாவுக்கரசு சுவாமிகளின் அவதாரத் தலம் திருவாமூர். இத்தலத்தில் அமைக்கப்பெற்றுள்ள அப்பர் பெருமான் திருக்கோயிலில் ஆண்டுதோறும் மிகச் சிறப்பாக சித்திரைச் சதயத்தில் குருபூசை விழா நடைபெறும். 21—4—71ல் நடைபெற்ற குருபூசை விழாவில் இம்மலர் வெளியிடப்பெற்றது. சைவசித்தாந்த வினாவிடை நூல் இம்மலராக முகிழ்த்துள்ளது. ஞானசம்பந்தம் இதழில் மாதந்தோறும் வெளிவந்த கட்டுரைத் தொகுப்பு. எழுதியவர்: மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேலு முதலியார். அளவு, கிரௌன் 1x4. பக்கங்கள் 142. விலை ரூ. 2—00

## 5. அறிவியல் நூல்கள்

75. பரமாணுப் புராணம். வெளியீடு எண். 296.

மெய்ஞ்ஞானஉணர்விற்கு விஞ்ஞானமும் வகைசெய்கிறது என்பதை விளக்குவது. பௌதிக ஆராய்ச்சிகளைத் தமிழிலும் தெளிவாக எழுத முடியும் என்பதை எடுத்துக்காட்டுவது. சிறந்த அணு ஆராய்ச்சிநூல். எழுதியவர்:- திருமதி. இ. டி இராஜேசுவரி அம்மையார். கிரௌன் 1 x 8. பக்கங்கள் 392. விலை ரூ. 1—25

## 6. ஆங்கில நூல்கள்

ரு. பை.

76. Sri Gurugnana Sambandha of Dharmapuram.

தருமையாதீன முதற் பெருங்குரவராகிய ஸ்ரீ குரு ஞானசம்பந்தருடைய அருள் வரலாற்றைத் தமிழறிஞர் திரு. மு. அருணாசலம் எம். ஏ., அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்கள். வரலாற்றுடன் ஸ்ரீ குருஞான சம்பந்தர் உலகிற்கு வழங்கியுள்ள அருட்செய்திகளாகிய அருட்பனுவல்களைப் பற்றியும் சுருக்கமாக இந்நூல் கூறியுள்ளது. 26-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாட்சியேற்ற முதல் குருபூஜை மலராக இதனை வெளியிட்டுள்ளார்கள். பக்கங்கள் 108. அளவு கிரௌன் 1x8. விலை ரு. 1—00

77. The Development of Saivism in South India. வெளியீடு எண். 554.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துணைப்பேராசிரியராக இருந்த சைவ இலக்கியப்பேரறிஞர் டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனாரின் ஆராய்ச்சி நூல்; அவர்க்குடாக்டர்பட்டம்தந்தசிறப்புடையஆராய்ச்சிநூல் பல்லவர்க்கு முற்பட்ட காலந் தொடங்கிச் சைவ மடங்கள் காலம் வரை தென்னாட்டின் சைவ சமய வளர்ச்சியை ( கி. பி. 300 — 1300 ) விரிவாக ஆராய்கிறது இந்நூல். 12 அத்தியாயங்களைக் கொண்டது. அளவு கிரௌன் 1x8 பக்கங்கள் 307. விலை ரு. 2—00

78. Studies in Saiva Siddhanta [Part I] வெளியீடு எண், 555.

சித்தாந்தப் பேராசிரியராக விளங்கிப் பல நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த பேரறிஞர் திரு. ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை அவர்கள் எழுதிய ஆங்கிலக் கட்டுரைத் திரட்டின் முதற் பாகம், தருமையாதீனம் முதற் பெருங்குரவர் குருபூஜைத் திருநாளில் ( 17—10—62 ) வெளியிடப்பெற்றது. கடவுள் உண்மை, சைவ அத்வைத தத்துவமும் சைவ சமயமும், கடவுளும் உலகமும், இந்தியத் தத்துவங்களின் ஒருமைப்பாடு,

ரூ. பை

முதலிய அரும் பொருட் கட்டுரைகள் பத்து இதன் கண் அடங்கியுள்ளன. அளவு, கிரௌன் 1x8, பக்கங்கள் 275. விலை ரூ. 1—75

79. Saiva - Siddhanta

வெளியீடு எண். 590.

சைவசித்தாந்த உண்மைகளை ஆங்கிலத்தில் தெளிவுசெய்யும் அழகிய நூல். இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் வெளியிடப் பெற்றது. முப்பொருள் இயல்புகளையும் இலக்கணங்களையும் விவரிக்கும் இந் நூலை எழுதியவர்: திரு. க. வச்சிரவேலு முதலியார் B.A.,L.T. அளவு, கிரௌன் 1x4 பக்கங்கள் 44. விலை ரூ. 1—00

---

நந்திதேவர் இறைவனிடம் வேண்டிய

## பதினாறு பேறுகள்

மறைகள் சைவ சமயம் இவற்றைப் பழித்துரைப்போர் சொற்களைச் சொல்லாதமனம், ஐம்புலன்களை அடிமைகொள்ளும் சதுரப்பாடு, பிறவி தீது என்று கருதாத பேதையர்களோடு மாறுபாடு, நல்லறம் செய்பவர்களோடு உறவு, மனம், வாக்கு இரண்டும் அடியவர்களிடம் ஒருப்படுவதால் விளையும் மகிழ்வு, கனவிலும் சிவனடியார்க்கு அடிமையாகும் நினைப்பு, சிவனையன்றி வேறொரு கடவுளை வழிபடாநெறி, சிவகீர்த்தியையே உரைக்கும் தன்மை, எது கேட்டாலும் அன்பர்க்கு ஈயும் இயல்பு, மாதவம் உடையார் ஒறுப்பினும் வணங்கிடும் தன்மைகளும், உபதேசம் கேட்டல், அடியவர் தீதுசெய்யினும் சிவலீலை எனக் கருதும் தன்மை, புறச் சமய நெறிகளை விரும்பாததன்மை, பிறமாதரைக் கருதாத மனம், பிறர் செல்வம் விரும்பாத வளமை, பிறர்மனை நயவாத துறவு இவை திருநந்திதேவர் இறைவனிடம் கேட்டுப் பெற்ற பதினாறு பேறுகள்.

துறக்கம் மீதுஉறையினும் நரகில் தோன்றினும்
இறக்கினும் பிறக்கினும் இன்பந் துய்க்கினும்
பிறைக்கொழுந் தணிசடைப் பெரும இவ்வரம்
மறுத்திடா தெனக்குநீ வழங்கல்வேண்டும்

— திருவையாற்றுப் புராணம்.